# தமிழ்நாட்டில் ஜாதி – தீண்டாமைக் கொடுமைகள்

## – ஒரு கள ஆய்வு

EVIDENCE
Monitoring Human Rights &
Promoting Social Justice

வெளியீடு:
**பெரியார் திராவிடர் கழகம்**
29, இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்
சென்னை - 600 041

## நூல் கிடைக்குமிடங்கள்

பெரியார் படிப்பகம்
பேருந்து நிலையம் அருகில்
மேட்டூர் அணை - 636 401
9786316155

பெரியார் படிப்பகம்
அரசு விரைவுப் பேருந்து நிலையம்
காந்திபுரம் - கோவை
9843323153

பெரியார் படிப்பகம்
தோழர் பத்ரி நாராயணன் நினைவு நூலகம்
73 / 1 இலாயிட்ஸ் சாலை
சென்னை - 14
044.30228213

இராவணன் படிப்பகம்
இராதாகிருட்டிணன் நகர்
அரியாங்குப்பம்
புதுச்சேரி - 7
9443045614

பெரியார் படிப்பகம்
33, 60 அடி சாலை
வெள்ளியங்காடு
திருப்பூர் .4
98427.25598

மாவட்டத்தலைமை அலுவலகம்
53, நகராட்சி வணிகவளாகம்
பேருந்துநிலையம் அருகில்
கோபிச்செட்டிபாளையம்
98433 08261

**நன்கொடை : உரு 10.00**

விமர்சனங்களை அனுப்ப - periyardk@gmail.com

மின் நூலாகத் தரவிறக்கம் செய்ய
www.periyardk.org

முதற்பதிப்பு : 2010 ஏப்ரல் 14



## ஜாதி – தீண்டாமைக்கு எதிராக ஓர் ஆவணம்

*ஜாதி அடிப்படையில் மனிதர்களை இழிவுக்கும் அடக்கு முறைக்கும் உள்ளாக்கி, உரிமைகளைப் பறிக்கும் தீண்டாமைக் கொடுமைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உயிர்த் துடிப் போடு செயல்பட்டுக்கொண்டிருப்பதை சான்றுகளுடன் முன் வைக்கிறது இந்த வெளியீடு .*

*இப்போதெல்லாம் யார் தீண்டாமையைக் கடைபிடிக்கி றார்கள்? என்ற கேள்வியை எழுப்புவது உண்மைகளை மூடி மறைப் பதாகும் அல்லது கண்திறந்து பார்க்க மறுப்பதாகும். ஜாதி – தீண்டாமைக்கு எதிராகத் தொடங்கப்பட்டதுதான் பெரியாரின் திராவிடர் இயக்கம். இந்தக் கொடுமைகளில் இருந்தும் குலத் தொழில்களில் இருந்தும் மக்களை மீட்டெடுக்கவே பெரியாரின் திராவிடர் இயக்கம் கல்வி, பதவி, அரசியல் துறைகளில் ஒடுக்கப் பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடியது.*

*ஜாதி – தீண்டாமையை உறுதிப்படுத்தும் பார்ப்பனியக் கருத்தியலுக்கு எதிராகக் குரல் கொடுத்ததோடு மட்டும் நிற்காமல் ஜாதி ஆதிக்கவாதிகளுக்கு எதிராகக் களம் கண்ட வரலாறுகளும் பெரியாரின் இயக்கத்துக்கு உண்டு.*

*பெரியாருக்குப்பிறகு என்ன காரணத்தினாலோ ஜாதி ஆதிக்க எதிர்ப்புக் களப்பணி நின்றுபோய்விட்டது. அந்த வரலாற்றுத் தவறைச் சரிசெய்ய வேண்டுமென்ற கவலையோடு பெரியார் திராவிடர் கழகம் ஜாதி – தீண்டாமைக்கு எதிராக இந்த இரண்டாம் கட்டப் பரப்புரைப் பயணத்தைத் தொடங்குகிறது.*

*முதல் கட்டமாக இரட்டைக்குவளை மற்றும் தீண்டாமைக் கொடுமைகளால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுவரும் தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் 80 கிராமங்களில் 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பரப்புரைப் பயணத்தை நடத்தினோம். தேநீர்க் கடைகளில் '**இரட்டைக்குவளைகளை உடைப்போம்**' என்ற முழக்கத்துடன் களமிறங்கிய பெரியார் திராவிடர் கழகம்*

இரட்டைக்குவளைகளை வைத்திருந்த கடைகளின் பட்டியலைத் தயாரித்து கழக ஏடான பெரியார் முழக்கத்தில் வெளியிட்டு அரசின் கவனத்திற்குக் கொண்டுசென்றது. காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் நாள் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இரட்டைக் குவளைகள் இருந்த கடைகள் முற்றுகையிடப்பட்டன. நூற்றுக் கணக்கான தோழர்கள் கைதானார்கள்.

1957 ஆம் ஆண்டு பெரியாரின் ஆணைப்படி சாதியை ஒழிக்க அரசியல் சட்டத்தையே கொளுத்தி 10000க்கும் மேற்பட்ட தோழர்கள் கைதாகிய நாளான நவம்பர் 26 ஆம் நாளில் 2007 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தில் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் கிராமம் கிராமமாக நுழைந்து இரட்டைக்குவளை களை உடைத்தெறிந்தனர். நூற்றுக்கணக்கான தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இரண்டாம் கட்டமாக 2010 ஆம் ஆண்டு அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் நாளில் இருந்து மே 14 ஆம் நாள் வரை ஜாதி - தீண்டாமைக்கு எதிராக தேனி, திண்டுக்கல், திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், கடலூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி மாநிலத்திலும் ஒரு மாத பரப்புரைப் பயணத்தை பெரியார் திராவிடர் கழகம் தொடங்கியுள்ளது.

இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சமூகத்தில் புரை யோடிக்கிடக்கும் நோய். இந்தக் கொடுமைகளுக்கு ஆட்சியில் இருக்கும் அரசியல் கட்சிகளை மட்டும் குற்றம்சாட்டிப் பயனில்லை. ஆட்சிகள் மாறுவதாலேயே இந்த அவலங்கள் முடிவுக்கு வந்து விடாது. சமூகத்தில் வலிமையான தொடர்ச்சியான மக்கள் இயக்கம் நடத்தப்படவேண்டும் என்பதே முக்கியமானதாகும்.

பெரும்பான்மை வாக்குகளே வெற்றியை நிர்ணயிக்கும் என்ற தேர்தல் அமைப்பினால் ஜனநாயகம் ஜாதி நாயகமாகி பார்ப்பன நாயகத்தை உறுதிப்படுத்துகிறது. பெரும்பான்மை ஜாதி யினரது எதிர்ப்பு, பெரும்பான்மை வாக்குகளைப் பாதித்துவிடும் என்ற அச்சத்தினால் தேர்தல் கட்சிகள் ஜாதி - தீண்டாமை எதிர்ப்பு களிலில் இருந்து தங்களை ஒதுக்கிக் கொண்டன. இதன் விளைவு...? ஜாதி வெறுப்புகளும் பகைமையும் தேர்தல் வரும்போதெல்லாம் கூர்மையடைந்து விடுகின்றன. பார்ப்பனர், கடவுள், மதம், சாஸ்தி ரங்களோடு தேர்தலும் ஜாதிக்கு உரம்போட்டு வளர்க்கின்றது.



இந்த அவலமான சமூகச்சூழலில் ஜாதி - தீண்டாமை ஒழிப்பில் உண்மையான கவலையுள்ள தீண்டாமைக்கு உட்படாத பல்வேறு ஜாதிகளைச் சார்ந்த ஜாதி எதிர்ப்பாளர்கள் - இளைஞர்கள் இந்தப் போராட்டக்களத்திற்கு முன்வரவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஆதிக்க ஜாதியைச் சேர்ந்த இளைஞர்கள் ஜாதி - தீண்டாமைக்கு எதிராகக் களம் இறங்கினால் இந்தப் போராட்டத்தை வெற்றிப்படி நோக்கி நகர்த்தமுடியும் என்பதே எமது உறுதியான கருத்து.

தமிழ் பேசுவது மட்டுமே தமிழன் அடையாளமாகிவிடாது. ஜாதி அற்றவனாக வாழ்வதே தமிழனுக்கு சரியான அடையாளம்.

இந்த ஜாதி - தீண்டாமை ஒழிப்பில் கடந்த ஐந்து ஆண்டு களாக களஆய்வுகளை நடத்தி உண்மைகளை வெளிக்கொண்டு வரும் அரிய பணியை மதுரையில் இயங்கிவரும் எவிடன்ஸ் நிறுவனம் செய்துவருகிறது. அந்த நிறுவனம் தயாரித்த கள ஆய்வு களைத்தான் இந்த வெளியீட்டில் தொகுத்து வெளியிடுகிறோம். நூலாக வெளியிடுவதற்கு இந்த ஆய்வறிக்கைகளைக் கொடுத்து உதவிய எவிடன்ஸ் நிறுவனத்துக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழக கிராமங்களில் என்றும் எப்போதும் நீடிக்கும் தீண்டாமைக் கொடுமைகளின் பட்டியல் இது. நோயை மறைத்துப் பயனில்லை. நோய் தீர்க்கும் மருத்துவமே தேவை.

**பெரியார் திராவிடர் கழகம்**

# தலித்துகள் மீதான பாகுபாடுகள் குறித்த ஆய்வு

தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது; தீண்டாமையை கடைபிடிப்பது குற்றம் என்று இந்திய அரசியல் சாசனம் பிரிவு 17-ல் கூறப்பட்டுள்ளது. தீண்டாமையை ஒழிப்பதற்காக குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் 1955 என்கிற சிறப்புச் சட்டமும் உருவாக்கப்பட்டது. இதுமட்டு மல்லாமல் இச்சட்டம் இயற்றப்பட்டு 34 ஆண்டுகள் கடந்த பின்னர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 விதிகள் 1995 என்கிற சிறப்பு சட்டமும் இயற்றப்பட்டது. தீண்டாமை மற்றும் வன்கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும்; சமத்துவமும் சனநாயகமும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்கிற நோக்கத்திற்காக பல்வேறு திட்டங்களும் கொள்கைகளும் நீதி, நிர்வாக, காவல் கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனாலும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகள் ஒழிக்கப்படுகின்றனவா? இவற்றை ஒழிப்பதற்காக கொண்டு வரப்பட்ட சட்டங்களும் திட்டங்களும் கொள்கை களுக்கு முறையாக கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்கிற கேள்வி சிவில் சமூக குழுக்களிடையே முன்வைக்கப்படுகின்றன.

ஏனெனில் இரட்டை டம்ளர் முறை, தலித்துகள் கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுப்பு, அரசு பொது இடங் களை பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகள், பண்ணையடிமை, கொத்தடிமை என்று தீண்டாமை ஒருபக்கம், தலித் பெண்கள் பாலியல் வன்புணர்ச்சி, தலித்துகள் கொலை செய்யப்படுதல், தாக்கப்படுதல், மலம், சிறுநீர் குடிக்க வைத்து அவமானப் படுத்தப்படுதல் என்று வன்கொடுமை மற்றொரு பக்கம்; இப்படி தீண்டாமை சித்திரவதைகளாலும் வன்கொடுமைகளாலும் தலித்துகள் பல்வேறு புறக்கணிப்புகளுக்கும் அவமானங்களுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள் என்று பல்வேறு சம்பவங்கள் ‘சாட்சி களாக’ விளங்குகின்றன.

உண்மையில் என்னதான் நடக்கிறது? இன்னமும் தீண்டாமை வன்கொடுமைகள் நடக்கின்றனவா? இவற்றிற்கு யார் காரணம்? என்பது குறித்து எமது எவிடன்ஸ் அமைப்பு தமிழக அளவில் ஆய்வினை மேற்கொண்டு வருகிறது.

## ஆய்வின் நோக்கமும் வரையறையும்

தமிழக அரசு வெளியிட்டுள்ள 2006ஆம் ஆண்டு அறிக்கையில் தமிழகத்தில் வன்கொடுமைகள் நடக்கின்ற கிராமங்கள் 221, மறைமுகமாக வன்கொடுமைகள் இருக்கின்ற கிராமங்கள் 169, வன்கொடுமைகள் அதிகளவு நடக்கின்ற கிராமங்கள் 152 என்று மொத்தம் 542 கிராமங்களை பட்டியலிட்டு உள்ளது. (ஆதாரம் : Additional Director General of Police, CID, Social Justice)

இந்தப் புள்ளிவிபரம் நமக்கு அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக இருந் தாலும், எண்ணிக்கை அளவில் இவை சரிதானா? இவை வன் கொடுமைகள் என்கிற அளவில் மட்டும் கணக்கிடப்பட்டுள்ளதா? தீண்டாமை கிராமங்கள் கணக்கிடப்பட்டு இருக்கிறதா? என்பதற்கு சரியான ஆதாரம் இல்லை. ஆகவே எமது எவிடன்ஸ் அமைப்பு தமிழக அளவில் தீண்டாமை நடக்கக்கூடிய கிராமங் களை ஆய்வு செய்து, அவற்றை அரசிற்கும், மனித உரிமை ஆணை யங்களுக்கும் சிவில் சமூகக் குழுக்களுக்கும் எடுத்துச் சென்று, உரிய மனித உரிமை தர நிர்ணயங்களோடு சமூகநீதி கிடைக்க வேண்டும் என்கிற அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

இவ்வாய்வினை தமிழக அளவில் உள்ள, அனைத்து கிராமங்களிலும் நடத்த வேண்டும் என்று நோக்கமாகக் கொண் டாலும் ஆரம்பத்தில் சில மாதிரி கிராமங்களை ஆய்வு செய்யலாம் என்று திட்டமிடப்பட்டது.இதன் அடிப்படையில் தலித் பஞ்சாயத்து பிரதிநிதித்துவம் உள்ள கிராமங்களை ஆய்வு செய்ய லாம் என்று முடிவு செய்யப்பட்டது. தலித்துகள் அரசியல் பங்கேற்பில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெற வேண்டும் என்கிற “Measures of Positive Discrimination” அடிப்படையிலான சமவாய்ப்பு, சம அந்தஸ்த்து, நோக்கத்திற்கான இட ஒதுக்கீட்டின் அரசியல் பங்கேற்புதான் ரிசர்வ் தொகுதிகள். இவற்றில் தலித்துகள் மீதான பாகுபாடுகள் எப்படி இருக்கிறது? என்பது குறித்து ஆய்வு செய்ய



வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஏனெனில் பொது பஞ்சாயத்துத் தொகுதிகளைவிட தலித்துகள் பிரதிநிதித்துவம் உள்ள பஞ்சாயத்துகள் தலித்துகளின் நிலைமை என்னவாக இருக் கிறது என்பதை ஆய்வு செய்தால் மற்ற ‘பஞ்சாயத்து’ நிலவரங் களை நாம் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

மதுரை, சிவகங்கை, சேலம், ஈரோடு, கோயமுத்தூர், கடலூர், பெரம்பலூர், தேனி ஆகிய எட்டு மாவட்டங்களில் மொத்தம் 780 ரிசர்வ் பஞ்சாயத்துகள் உள்ளன. இவற்றில் 386 பஞ்சாயத்துகளில் ஆய்வு மேற்கொண்டுள்ளது. முப்பது வகை யான தீண்டாமை வடிவங்களை பட்டியலிட்டு கேள்விப் படிவங் களைக் கொண்டு டிசம்பர் 2006 முதல் நவம்பர் 2007 வரை நடத்தப் பட்ட இவ்வாய்வில் தகவல் அளிப்பவரின், நேர்காணல் கொடுப் பவரின் கையொப்பமும் ஆய்வு படிவத்தில் பெறப்பட்டுள்ளது. **குறிப்பாக பஞ்சாயத்துத் தலைவர்கள், தங்கள் பகுதிகளில் நடக்கக் கூடிய தீண்டாமைக் கொடுமைகளை கையொப்பம் இட்டு உறுதிப்படுத்தியுள்ளனர்.**

## வன்கொடுமைகளும், தீண்டாமை வடிவங்களும்

### மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டத்தில் 83 கிராமப் பஞ்சாயத்துகளில் (மொத்தம் ரிசர்வ் பஞ்சாயத்து:83) 22 பஞ்சாயத்து தலைவர்கள், தங்கள் பகுதிகளில் நடக்கக்கூடிய தீண்டாமைக் கொடுமைகளை உறுதி செய்துள்ளனர். 83 கிராமப் பஞ்சாயத்துகளில் 77 கிராமங் களில் இரட்டை டம்ளர் முறை உள்ளது. சாதி இந்துக்களுக்குத் தனிக்குவளை, தலித்துகளுக்கு தனிக்குவளை என்றுதேநீர்க் கடை களில் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான கிராமங்களில் தலித்துகளுக்கு அலுமினிய, பீங்கான் கிளாஸ்கள் கொடுக்கப்படு கின்றன. தலித்துகள்

கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுப்பு, திருவிழாவில் பங்கேற்க கட்டுப்பாடு என்று 35 கிராமங்களில் கோவில், வழிபாடு ரீதியான தீண்டாமை கடைபிடிக்கப்படுகின்றன.

பள்ளிக்கூடம் மற்றும் பள்ளிக்கூட வளாகத்தில் தலித் குழந்தைகள் மீதான பாகுபாடு 70 கிராமங்களில் கடைப்பிடிக்கப்

படுகின்றன. இவற்றில் ஆசிரியர்களும் சாதி இந்து மாணவர்களும் தலித் குழந்தைகளை சாதிய ரீதியாக இழிவாக நடத்துகின்றனர் என்கிற தகவல்களும் ஆய்வில் கிடைக்கப்பெற்றுள்ளது. தலித் குழந்தைகளை தனியாக உட்கார வைத்தல், அக்குழந்தை களுக்கு என்று தனி தண்ணீர் குடம், அக்குழந்தைகள் மீது மட்டும் ஆசிரி யர்கள் தனியாக கடைப்பிடிக்கப்படும் தண்டனை என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவ மனைகளில் மருத்துவர்களாலும் மருத்துவப் பணியாளர்களாலும் தலித்துகளுக்கு கடைப்பிடிக்கப்படும் சிகிச்சையில் பாகுபாடு காட்டப்படுகிறது. தொட்டு மருத்துவம் பார்க்காதது, அலட்சிய மாகப் பேசுவது, திட்டுவது, பிரசவம் பார்க்க அனுமதி மறுப்பது என்று மொத்தம் 83 கிராமங்களில் 36 கிராமங்களில் இப்பாகு பாடுகள் நிலவுகின்றன.

தலித் குழந்தைகள் கொத்தடிமை தொழில்களுக்கு வெளி மாநிலங்களுக்கும் வெளிமாவட்டங்களுக்கும் கடத்தப்படுகிற சூழல் மிகுதியாக காணப்படுகிறது. நாங்கள் ஆய்வு செய்த 83 கிராமங்களில் 46 கிராமங்களில் தலித் குழந்தைகள் கொத்தடிமை யாக உள்ளனர்.

ரேசன் மற்றும் பொதுக் கடைகளில் 76 கிராமங் களில் தலித்துகள் பாகுபாட்டுடன் நடத்தப்படுகின்றனர். வரிசை யில் நிற்க அனுமதி மறுப்பு, குறைவான பொருட்கள் விநியோகம், முக்கியப் பொருட்கள் கொடுக்க அனுமதி மறுப்பு என்று பாகு பாடுகள் கடைப்பிடிக் கப்படுகின்றன.

தலித் பெண்கள் மீதான பாலியல் சித்திரவதைகள் பாலியல் வன்புணர்ச்சி என்று 83 கிராமங்களில் 66 கிராமங்களில் சாதி இந்து ஆண்களால் வன்கொடுமைகள் நடத்தப்படுகின்றன. 83 ரிசர்வ் பஞ்சாயத்து கிராமங்களிலும் தீண்டாமைக் கொடுமைகள் சாதி இந்துக்களால் கடை பிடிக்கப்பட்டு வருகின்றன. அரசியல், பொருளாதாரம், அதிகாரப் பகிர்வு, அரசு இயந்திரங்களின் நடவடிக்கைகள், முடிவெடுக்கும் திறன் உள்ளிட்ட அனைத்து ஆளுமை காரணிகளையும் தீர்மானிக்கும் சக்திகளாக சாதி இந்துக் கள் உள்ளனர். 30 வகையான தீண்டாமை வடிவங்களை பட்டியல்



இட்டு ஆய்வு செய்தாலும், ஒவ்வொரு தீண்டாமையின் கொடூரமும் அவற்றின் வெவ்வேறு வடிவங்களும் அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக உள்ளன.

மதுரை மாவட்டத்திலுள்ள உள்ள 13 பஞ்சாயத்து யூனியன் களில் உள்ள 83 ரிசர்வ் பஞ்சாயத்துகளை ஆய்வு செய்த போது, ‘ரிசர்வ்’ பஞ்சாயத்துகள் கொண்டு வரப்பட்டதற்கான நோக்கங்கள் சனநாயக பங்களிப்புகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்று ஆராய்ந்து பார்த்தோமானால் ‘இல்லை’ என்கிற ஆய்வு முடிவு தான் ‘கண்டறிந்தவைகளாக’ ஆய்வில் கிடைக்கின்றன. தலித்து களுக்கு தனிக்குவளை என்கிற இரட்டை டம்ளர் முறையின் வடிவத்தை ஆய்வு செய்த போது அவற்றில் எத்தனை விதமான கூறுகள் - தன்மைகள்.

- இன்னமும் தேங்காய் செரட்டை முறை உள்ளது. இந்த தேங்காய் செரட்டையை தலித்துகள் தேநீர்க் கடையில் கூரையில் சொருகி வைத்திருக்க வேண்டும். தேநீர் வாங்கும் போது 1 அடி உயரம் உள்ள தாழ்வான நிலையில் வைத்துதான் தேநீர் பிடிக்க வேண்டும் என்கிற ‘பாகுபாட்டின் வடிவம்’ வன்கொடுமையின் உச்சமாக நாங்கள் கருதுகிறோம்.

- பிரசவ காலங்களில் ஆரம்ப சுகாதார மையத்தில் உள்ள செவிலியர்கள் கர்ப்பமான தலித் பெண்ணை தொட்டு மருத்துவம் பார்க்க மாட்டார்.

- பேருந்துகளில் பயணம் செய்யும் போது சாதி இந்துக்கள் வந்தால் உட்கார்ந்து இருக்கக்கூடிய தலித்துகள் எழுந்து நிற்க வேண்டும்.

- பால்வாடியில் தலித் குழந்தைகளுக்கு அரை முட்டை மட்டுமே கொடுக்கப்படுகிறது.

- கிராமத்தில் உள்ள மனமகிழ் மன்றங்களில் தலித்துகளின் குடும்ப நிகழ்ச்சி அனுமதிக்கப்படவில்லை.

இப்படி தீண்டாமையின் பட்டியல் நீண்டு கொண்டே போவதை எமது ஆய்வு உறுதி செய்துள்ளது.

## சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்டத்தில் நாங்கள் ஆய்வு செய்த 80 ரிசர்வ் பஞ்சாயத்துகளில் (மொத்தம் ரிசர்வ் பஞ்சாயத்து 85) 40 பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கள் பகுதிகளில் நடக்கக்கூடிய தீண்டாமைக் கொடுமைகளை உறுதி செய்துள்ளனர்.

80 கிராமப் பஞ்சாயத்துகளில் 48 கிராமங்களில் இரட்டை டம்ளர் முறை உள்ளது. சாதி இந்துக்களுக்கு தனிக்குவளை, தலித்து களுக்கு தனிக்குவளை என்று தேநீர்க் கடைகளில் பயன்படுத்தப் படுகின்றன. பெரும்பாலான கிராமங்களில்தலித்துகளுக்குஅலுமினிய, பீங்கான்கிளாஸ்கள்கொடுக்கப்படுகின்றன. தலித்துகள் கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுப்பு, திருவிழாவில் பங்கேற்க கட்டுப்பாடு என்று 64 கிராமங்களில் கோவில், வழிபாடு ரீதியான தீண்டாமை கடைப்பிடிக்கப்படு கின்றன. பள்ளிக்கூடம் மற்றும் பள்ளிக்கூட வளாகத்தில் தலித் குழந்தைகள் மீதான பாகுபாடு 05 கிராமங்களில் கடைபிடிக்கப் படுகின்றன. இவற்றில் ஆசிரியர்களும் சாதி இந்து மாணவர்களும் தலித் குழந்தைகளை சாதிய ரீதியாக இழிவாக நடத்துகின்றனர் என்கிற தகவல்களும் எமது ஆய்வில் கிடைக்கப் பெற்றுள்ளது. தலித் குழந்தைகளை தனியாக உட்கார வைத்தல், அக்குழந்தை களுக்கு என்று தனி தண்ணீர் குடம், அக்குழந்தைகள் மீது மட்டும் ஆசிரியர்கள் தனியாக கடைப்பிடிக்கப்படும் தண்டனை என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவ மனைகளில் மருத்துவர்களாலும் மருத்துவப் பணியாளர்களாலும் தலித்துகளுக்கு கடைப்பிடிக்கப்படும் சிகிச்சையில் பாகுபாடு காட்டப்படுகிறது. தொட்டு மருத்துவம் பார்க்காதது, அலட்சி யமாகப் பேசுவது, திட்டுவது, பிரசவம் பார்க்க அனுமதி மறுப்பது என்று மொத்தம் 80 கிராமங்களில் 08 கிராமங்களில் இப்பாகு பாடுகள் நிலவுகின்றன.

தலித் குழந்தைகள் கொத்தடிமை தொழில்களுக்கு வெளி மாநிலங்களுக்கும் வெளி மாவட்டங்களுக்கும் கடத்தப்படுகிற சூழல் மிகுதியாக காணப்படுகிறது. நாங்கள் ஆய்வு செய்த 80 கிராமங்களில் 14 கிராமங்களில் தலித் குழந்தைகள் கொத்தடிமையாக உள்ளனர். ரேசன் மற்றும் பொதுக் கடைகளில் 31 கிராமங்களில் தலித்துகள் பாகுபாட்டுடன் நடத்தப்படுகின்றனர். வரிசையில் நிற்க அனுமதி



மறுப்பு, குறைவான பொருட்கள் விநியோகம், முக்கியப் பொருட் கள் கொடுக்க அனுமதி மறுப்பு என்று பாகுபாடுகள் கடை பிடிக்கப்படுகின்றன. தலித் பெண்கள் மீதான பாலியல் சித்திர வதைகள் பாலியல் வன்புணர்ச்சி என்று 80 கிராமங்களில் 24 கிராமங்களில் சாதி இந்து ஆண்களால் வன்கொடுமைகள் நடத்தப்படுகின்றன. எமது எவிடன்ஸ் அமைப்பு ஆய்வு செய்த 80 ரிசர்வ் பஞ்சாயத்து கிராமங்களிலும் தீண்டாமைக் கொடுமைகள் சாதி இந்துக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அரசியல், பொருளாதாரம், அதிகாரப்பகிர்வு, அரசு இயந்திரங்களின் நடவடிக்கைகள், முடிவெடுக்கும் திறன் உள்ளிட்ட அனைத்து ஆளுமை காரணிகளையும் தீர்மானிக்கும் சக்திகளாக சாதி இந்துக்கள் உள்ளனர். 30 வகையான தீண்டாமை வடிவங்களை பட்டியல் இட்டு ஆய்வு செய்தாலும், ஒவ்வொரு தீண்டாமையின் கொடூரமும் அவற்றின் வெவ்வேறு வடிவங் களும் அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக உள்ளன.

## ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்கள்

ஈரோடு மாவட்டத்தில் 30 ரிசர்வ் பஞ்சாயத்துகளில் (மொத்தம் ரிசர்வ் பஞ்சாயத்து 69) 15 பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கள் பகுதிகளில் நடக்கக்கூடிய தீண்டாமைக் கொடுமைகளை உறுதி செய்துள்ளனர். சேலம் மாவட்டத்தில் நாங்கள் ஆய்வு செய்த 27 ரிசர்வ் பஞ்சாயத்துகளில் (மொத்தம் ரிசர்வ் பஞ்சாயத்து 99) 22 பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கள் பகுதிகளில் நடக்கக் கூடிய தீண்டாமைக் கொடுமைகளை உறுதி செய்துள்ளனர்.

57 கிராமப் பஞ்சாயத்துகளில் 33 கிராமங்களில் இரட்டை டம்ளர் முறை உள்ளது. சாதிய இந்துக்களுக்கு தனிக்குவளை, தலித்துகளுக்கு தனிக்குவளை என்று தேநீர்க் கடைகளில் பயன்படுத்தப்படுகின்றன. பெரும் பாலான கிராமங்களில் தலித்து களுக்கு அலுமினிய, பீங்கான் கிளாஸ்கள் கொடுக்கப்படுகின்றன. தலித்துகள் கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுப்பு, திருவிழாவில் பங்கேற்க கட்டுப்பாடு என்று 40 கிராமங்களில் கோவில், வழிபாடு ரீதியான தீண்டாமை கடைப்பிடிக்கப்படுகின்றன. தப்பு அடிக்க கட்டாயப்படுத்தப்படுதல் மற்றும் இழவுச் செய்தி சொல்லுதல் உள்ளிட்ட இறப்பு சடங்குகள் வேலைக்காக 48 ரிசர்வ் கிராமங் களில் தலித்துகள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

தலித் பெண்கள் மீதான கொடிய பாலியல் வன்புணர்ச்சி 4 கிராமங்களில் நடக்கின்றன. பெரும்பாலும் கிராமங்களில் தலித் பெண்கள் மீதான பாகுபாடுகள் வன்முறைகள் நடந்தாலும் 4 கிராமங்களில் மட்டும் தலித் பெண்கள் கொடிய அளவிற்கு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

சுடுகாடு இல்லாமலும், சுடுகாடு சார்ந்த பாகுபாடுகளும் 46 கிராமங்களில் நிலவுகின்றன. அரசு பொதுக் கழிப்பறையை பொறுத்தவரையில் 11 பஞ்சாயத்துகளில் பாகுபாடுகள் நிலவுகின்றன.12 ரிசர்வ் பஞ்சாயத்துக் கிராமங்களில் ரேசன் கடைகளில் பாகுபாடுகள் கடைபிடிக்கப்படுகின்றன. எமது எவிடன்ஸ் அமைப்பு ஆய்வு செய்த 57 ரிசர்வ் பஞ்சாயத்துக் கிராமங்களிலும் தீண்டாமைக் கொடுமைகள் சாதி இந்துக்களால் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. அரசியல், பொருளாதாரம், அதிகாரப்பகிர்வு, அரசு இயந்திரங்களின் நடவடிக்கைகள், முடிவெடுக்கும் திறன் உள்ளிட்ட அனைத்து ஆளுமை காரணிகளையும் தீர்மானிக்கும் சக்திகளாக சாதி இந்துக்கள் உள்ளனர். 30 வகையான தீண்டாமை வடிவங்களை பட்டியல் இட்டு ஆய்வு செய்தாலும், ஒவ்வொரு தீண்டாமையின் கொடூரமும் அவற்றின் வெவ்வேறு வடிவங்களும் அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக உள்ளன. சேலம், ஈரோடு மாவட்டங்களில் உள்ள 57 ரிசர்வ் பஞ்சாயத்துகளை ஆய்வு செய்த போது, 'ரிசர்வ்' பஞ்சாயத்துகள் கொண்டுவரப்பட்டதற்கான நோக்கங்கள் சனநாயக பங்களிப்புகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்று ஆராய்ந்து பார்த்தோமானால் 'இல்லை' என்கிற ஆய்வு முடிவு தான் 'கண்டறிந்தவைகளாக' ஆய்வில் கிடைக்கின்றன.

- பேருந்துகளில் பயணம் செய்யும் போது சாதி இந்துக்கள் வந்தால் உட்கார்ந்து இருக்கக்கூடிய தலித்துகள் எழுந்து நிற்க வேண்டும்.

- தலித்துகளுக்கு முடிவெட்ட மறுப்பு தெரிவித்தல்.

- கிராமத்தில் உள்ள மனமகிழ் மன்றங்களில் தலித்துகளின் குடும்ப நிகழ்ச்சி அனுமதிக்கப்படவில்லை.



## பெரம்பலூர் மாவட்டம்

பெரம்பலூர் மாவட்டத்தில் நாங்கள் ஆய்வு செய்த 45 ரிசர்வ் பஞ்சாயத்துகளில் (மொத்தம் ரிசர்வ் பஞ்சாயத்து 93) 30 பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கள் பகுதிகளில் நடக்கக்கூடிய தீண்டாமைக் கொடுமைகளை உறுதி செய்துள்ளனர்.

45 கிராமப் பஞ்சாயத்துகளில் 24 கிராமங்களில் இரட்டை டம்ளர் முறை உள்ளது. சாதி இந்துக் களுக்கு தனிக்குவளை, தலித்துகளுக்கு தனிக்குவளை என்று தேநீர்க் கடைகளில் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான கிராமங்களில் தலித்துகளுக்கு சில்வர் மற்றும் பிளாஸ்டிக் டம்ளர்களில் கொடுக்கப்படுகின்றன. தலித்துகள் கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுப்பு, திருவிழாவில் பங்கேற்க கட்டுப்பாடு என்று 35 கிராமங்களில் கோவில், வழிபாடு ரீதியான தீண்டாமை கடைபிடிக்கப்படுகின்றன. பள்ளிக்கூடம் மற்றும் பள்ளிக்கூட வளாகத்தில் தலித் குழந்தைகள் மீதான பாகுபாடு 03 கிராமங்களில் கடைபிடிக்கப்படுகின்றன. இவற்றில் ஆசிரியர்களும் சாதி இந்து மாணவர்களும் தலித் குழந்தைகளை சாதிய ரீதியாக இழிவாக நடத்துகின்றனர் என்கிற தகவல்களும் எமது ஆய்வில் கிடைக்கப் பெற்றுள்ளது.

ரேசன் மற்றும் பொதுக்கடைகளில் 8 கிராமங்களில் தலித்துகள் பாகுபாட்டுடன் நடத்தப்படுகின்றனர். வரிசையில் நிற்க அனுமதி மறுப்பு, குறைவான பொருட்கள் விநியோகம், முக்கியப் பொருட்கள் கொடுக்க அனுமதி மறுப்பு என்று பாகுபாடுகள் கடைபிடிக்கப்படுகின்றன. முப்பது பஞ்சாயத்துகளில் தலித்துகள் கோயிலுக்கு சென்று வழிபட அனுமதி மறுக்கப்பட்டுள்ளனர்.

அரசு மற்றும் பொது இடங்களை பயன்படுத்துவதில் 12 பஞ்சாயத்துகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இறந்து போன பிராணிகளை அப்புறப்படுத்துமாறு 28 பஞ்சாயத்துகளில் தலித்துகள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இழவு செய்தி சொல்ல, தப்பு அடிக்க கட்டாயப்படுத்துதல் என்று 38 கிராமங்களில் தலித்துகள் மீது பாகுபாடு காட்டப்படுகின்றன.

ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் பகுதிகளில் உள்ள பிழிச்சிக்குழி, அணைக்குடம், அயனாபுரம், அஸ்தினாபுரம்,

பெரியஆத்துக்குறிச்சி பஞ்சாயத்துகளில் தலித்துகளுக்கு முடி வெட்ட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

45 ரிசர்வ் பஞ்சாயத்து கிராமங்களிலும் தீண்டாமைக் கொடுமைகள் சாதி இந்துக்களால் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. அரசியல், பொருளாதாரம், அதிகாரப்பகிர்வு, அரசு இயந்திரங் களின் நடவடிக்கைகள், முடிவெடுக்கும் திறன் உள்ளிட்ட அனைத்து ஆளுமை காரணிகளையும் தீர்மானிக்கும் சக்திகளாக சாதி இந்துக்கள் உள்ளனர். 30 வகையான தீண்டாமை வடிவங்களை பட்டியல் இட்டு ஆய்வு செய்தாலும், ஒவ்வொரு தீண்டாமையின் கொடூரமும் அவற்றின் வெவ்வேறு வடிவங்களும் அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக உள்ளன. பெரமபலூர் மாவட்டத்திலுள்ள உள்ள 10 பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள 45 ரிசர்வ் பஞ்சாயத்து களை ஆய்வு செய்த போது, 'ரிசர்வ்' பஞ்சாயத்துகள் கொண்டு வரப்பட்டதற்கான நோக்கங்கள் சனநாயக பங்களிப்புகள் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளதா என்று ஆராய்ந்து பார்த்தோமானால் 'இல்லை' என்கிற ஆய்வு முடிவு தான் 'கண்டறிந்தவைகளாக' ஆய்வில் கிடைக்கின்றன.

## கடலூர் மாவட்டம்

கடலூர் மாவட்டத்தில் 86 ரிசர்வ் பஞ்சாயத்துகளில் (மொத்தம் ரிசர்வ் பஞ்சாயத்து 237) 52 பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கள் பகுதிகளில் நடக்கக்கூடிய தீண்டாமைக் கொடுமைகளை உறுதி செய்துள்ளனர்.

86 கிராமப் பஞ்சாயத்துகளில் 16 கிராமங்களில் இரட்டை டம்ளர் முறை உள்ளது. சாதி இந்துக்களுக்கு தனிக்குவளை, தலித்து களுக்கு தனிக்குவளை என்று தேநீர்க் கடைகளில் பயன்படுத்தப் படுகின்றன. பெரும்பாலான கிராமங்களில் தலித்துகளுக்கு சில்வர் குவளையும், சாதி இந்துக்களுக்கு கண்ணாடி குவளையும் கொடுக்கப்படுகின்றன. சில இடங்களில் இரண்டு தரப்பினருக்கும் கண்ணாடிக் குவளை பயன்படுத்தப்பட்டாலும், தலித்துகளுக்கு கொடுக்கப்படுகிற குவளைகளில் பெயிண்ட் மார்க் செய்து கொடுக்கப்படுகிறது. தலித்துகள் கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுப்பு, திருவிழாவில் பங்கேற்க கட்டுப்பாடு என்று 54 கிராமங் களில் கோவில், வழிபாடு ரீதியான தீண்டாமை கடைபிடிக்கப் படுகின்றன. திரௌபதியம்மன் கோவில்களில் கடைபிடிக்கப்படும்



பாகுபாடு என்பது தீண்டாமையின் உச்சக்கட்டமாக உள்ளது என்பதை நாங்கள் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். கோவில் என்பது பொது இடம்: பொது பங்கேற்புக்கான நிறுவனம் என்கிற உண்மை கூட தெரியாமல் ஒரு குறிப்பிட்ட சாதியினரின் சொத் தாகவே இக்கோவில்கள் கருதப்படுவது தெரியவந்துள்ளது. பெரும்பாலான கிராமங்களில் உள்ள கோவில்கள் சாதியின் கட்டுமானத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

86 ரிசர்வ் பஞ்சாயத்துகளில் 11 பஞ்சாயத்துகளில் ரேசன் கடை, அஞ்சலகம், சுகாதார மையம் உள்ளிட்ட அரசு நிறுவனங் களில் பாகுபாடுகள் கடைபிடிக்கப் படுகின்றன. பள்ளிக்கூடம் மற்றும் பள்ளிக்கூட வளாகத்தில் தலித் குழந்தைகள் மீதான பாகு பாடு 5 பஞ்சாயத்துகளில் கடைபிடிக்கப் படுகின்றன. இவற்றில் சாதி இந்து மாணவர்களும், ஆசிரியர்களும் தலித் குழந்தைகளை சாதிய ரீதியாக இழிவாக நடத்துகின்றனர் என்கிற தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளது. குறிஞ்சிப்பாடி ஒன்றியம் காயல்பட்டு கிராமத்தைச் சேர்ந்த தலித் மக்கள் எமது குழுவினரிடம் இதுவரை தலித் குழந்தைகள் இக்கிராமத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்ததில்லை வெளிகிராமங் களுக்குச் சென்றுதான் படித்து வருகின்றனர். இதற்கு முக்கியக் காரணம் இங்குள்ள பாகுபாடுதான்என்று கூறினர்.

தலித் மக்களுக்கு முடி வெட்ட அனுமதி மறுப்பு என்கிற பாகுபாடு பண்ருட்டி ஒன்றியத்திலும், குறிஞ்சிப்பாடி ஒன்றியத் திலும் அதிகளவு உள்ளது. குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தில் மொத்தம் நாங்கள் 7 பஞ்சாயத்துகளில் ஆய்வு நடத்திய போது அவற்றில் 3 பஞ்சாயத்துகளில் இப்பாகுபாடு உள்ளது. பண்ருட்டி ஒன்றியத்தில் மொத்தம் 5 பஞ்சாயத்துகளில் 3 பஞ்சாயத்துகளில் தலித் மக்களுக்கு முடிவெட்ட அனுமதி மறுக்கப்படுகிற சூழல் உள்ளது.

அரசு மற்றும் பொதுக் கழிப்பறையை பயன்படுத்துவதில் தலித்துகள் அனுமதி மறுக்கப்படுகின்றனர். அப்படி பொதுக் கழிப்பறையை தலித் மக்கள் பயன்படுத்தினால் சாதி இந்துக் களால் அவர்கள் கடும் மிரட்டலுக்கு உட்படுத்தப் படுகின்றனர். 11 பஞ்சாயத்துகளில் இப்பாகுபாடு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இழவுச் செய்தி சொல்வதற்கும், இழவுச் சடங்குகளில் ஈடுபடு வதற்கும், தப்பு அடிப்பதற்கும் 75 பஞ்சாயத்துகளில் தலித்துகள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். ரேசன் மற்றும் பொதுக் கடை

களில் 13 பஞ்சாயத்துகளில் தலித்துகள் பாகுபாட்டுடன் நடத்தப் படுகின்றனர். வரிசையில் நிற்க அனுமதி மறுப்பு, குறைவான பொருட்கள் விநியோகம், முக்கியப் பொருட்கள் கொடுக்க அனுமதி மறுப்பு என்று பாகுபாடுகள் கடைபிடிக்கப்படுகின்றன.

தலித்துகளை சாதி ரீதியாக இழிவாகப் பேசுகிற நிலை 47 பஞ்சாயத்துகளில் கடைபிடிக்கப்படுகின்றன. தலித்துகள் மீது தொடர் தாக்குதல், மிரட்டுதல் உள்ளிட்ட வன்கொடுமைகள் 26 பஞ்சாயத்துகளில் நிலவுகின்றன. தலித் பெண்கள் மீதான பாலியல் சித்திரவதைகள், பாலியல் வன்புணர்ச்சி, வன்கொடுமைகள் 5 பஞ்சாயத்துகளில் நடந்துள்ளன, நடந்து கொண்டிருக்கின்றன. தலித் பெண்கள் மீதான பாலியல் வன்முறை மிகுந்த அளவு காணப்பட்டாலும் அவற்றை வெளியே சொல்லாமல் அல்லது வெளியே கொண்டு வரப்பட்டால் சமரசம் செய்து வைப்பது, மிரட்டலுக்கு உட்படுத்துவது உள்ளிட்ட நிலைமைகள் இப்பகுதியில் உள்ளன.

எமது எவிடன்ஸ் அமைப்பு ஆய்வு செய்த 86 ரிசர்வ் பஞ்சாயத்துக் கிராமங்களிலும் தீண்டாமைக் கொடுமைகள் சாதி இந்துக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அரசியல், பொருளாதாரம், அதிகாரப்பகிர்வு, அரசு இயந்திரங்களின் நடவடிக்கைகள், முடிவெடுக்கும் திறன் உள்ளிட்ட அனைத்து ஆளுமை காரணிகளையும் தீர்மானிக்கும் சக்திகளாக சாதி இந்துக்கள் உள்ளனர். 30 வகையான தீண்டாமை வடிவங்களை பட்டியல் இட்டு ஆய்வு செய்தாலும், ஒவ்வொரு தீண்டாமையின் கொடூரமும் அவற்றின் வெவ்வேறுவடிவங்களும் அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக உள்ளன.

கடலூர் மாவட்டத்திலுள்ள உள்ள 10 பஞ்சாயத்து யூனியன்களில் 86 ரிசர்வ் பஞ்சாயத்துகளை ஆய்வு செய்த போது, ‘ரிசர்வ்’ பஞ்சாயத்துகள் கொண்டு வரப்பட்டதற்கான நோக்கங்கள் சனநாயக பங்களிப்புகள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதா என்று ஆராய்ந்து பார்த்தோமானால் ‘இல்லை’ என்கிற ஆய்வு முடிவு தான் ‘கண்டறிந்தவைகளாக’ ஆய்வில் கிடைக்கின்றன. நாங்கள் செய்த ஆய்வில் 17 பஞ்சாயத்துத் தலைவர்கள் சுதந்திரமாக, தன்னிச்சையாக செயல்பட முடியவில்லை என்று கூறியிருக் கின்றனர்.



## தேனி மாவட்டம்

தேனி மாவட்டத்தில் 20 ரிசர்வ் பஞ்சாயத்துகளில் (மொத்தம் ரிசர்வ் பஞ்சாயத்து 32) 11 பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கள் பகுதிகளில் நடக்கக்கூடிய தீண்டாமைக் கொடுமைகளை உறுதி செய்துள்ளனர்.

20 கிராமப் பஞ்சாயத்துகளில் 09 கிராமங்களில் இரட்டை டம்ளர் முறை உள்ளது. சாதி இந்துக்களுக்கு தனிக்குவளை, தலித்து களுக்கு தனிக்குவளை என்று தேநீர்க் கடைகளில் பயன்படுத்தப் படுகின்றன. தலித்துகள் கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுப்பு, திருவிழாவில் பங்கேற்க கட்டுப்பாடு என்று 13 கிராமங்களில் கோவில், வழிபாடு ரீதியான தீண்டாமை கடைப்பிடிக்கப்படுகின்றன. கோவில் என்பது பொது இடம். பொது பங்கேற்புக்கான நிறுவனம் என்கிற உண்மை கூட தெரியாமல் ஒரு குறிப்பிட்ட சாதியினரின் சொத்தாகவே இக்கோவில்கள் கருதப்படுவது தெரியவந்துள்ளது. பெரும்பாலான கிராமங்களில் உள்ள கோவில்கள் சாதியின் கட்டு மானத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

தலித் மக்களுக்கு முடி வெட்ட அனுமதி மறுப்பு என்கிற பாகுபாடு 6 பஞ்சாயத்துகளில் நிலவுகின்றன. இழவுச் செய்தி சொல்வதற்கும், இழவுச் சடங்குகளில் ஈடுபடுவதற்கும், தப்பு அடிப் பதற்கும் 20 பஞ்சாயத்துகளில் தலித்துகள் கட்டாயப்படுத்தப் படுகின்றனர். ரேசன் மற்றும் பொதுக் கடைகளில் 02 பஞ்சாயத்து களில் தலித்துகள் பாகுபாட்டுடன் நடத்தப்படுகின்றனர். வரிசையில் நிற்க அனுமதி மறுப்பு, குறைவான பொருட்கள் விநியோகம், முக்கியப் பொருட்கள் கொடுக்க அனுமதி மறுப்பு என்று பாகு பாடுகள் கடைபிடிக்கப்படுகின்றன.

தலித்துகளை சாதிய ரீதியாக இழிவாகப் பேசுகிற நிலை 13 பஞ்சாயத்துகளில் கடைபிடிக்கப்படுகின்றன. தலித்துகள் மீது தொடர் தாக்குதல், மிரட்டுதல் உள்ளிட்ட வன்கொடுமைகள் பெரும்பாலான பஞ்சாயத்துகளில் நிலவுகின்றன. தலித் பெண்கள் மீதான பாலியல் சித்திரவதைகள், பாலியல் வன்புணர்ச்சி, வன்கொடுமைகளும் சில பஞ்சாயத்துகளில் நடந்து கொண்டிருக் கின்றன. தலித் பெண்கள் மீதான பாலியல் வன்முறை மிகுந்த அளவு காணப்பட்டாலும் அவற்றை வெளியே சொல்லாமல் அல்லது வெளியே கொண்டு வரப்பட்டால் சமரசம் செய்து

வைப்பது, மிரட்டலுக்கு உட்படுத்துவது உள்ளிட்ட நிலைமைகள் இப்பகுதியில் உள்ளன.

20 ரிசர்வ் பஞ்சாயத்துக் கிராமங்களிலும் தீண்டாமைக் கொடுமைகள் சாதி இந்துக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அரசியல், பொருளாதாரம், அதிகாரப்பகிர்வு, அரசு இயந்திரங் களின் நடவடிக்கைகள், முடிவெடுக்கும் திறன் உள்ளிட்ட அனைத்து ஆளுமை காரணிகளையும் தீர்மானிக்கும் சக்திகளாக சாதி இந்துக்கள் உள்ளனர். 30 வகையான தீண்டாமை வடிவங்களை பட்டியல் இட்டு ஆய்வு செய்தாலும், ஒவ்வொரு தீண்டாமையின் கொடூரமும் அவற்றின் வெவ்வேறு வடிவங்களும் அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக உள்ளன.

தேனி மாவட்டத்திலுள்ள 20 ரிசர்வ் பஞ்சாயத்துகளை ஆய்வு செய்த போது, 'ரிசர்வ்' பஞ்சாயத்துகள் கொண்டுவரப்பட்டதற்கான நோக்கங்கள் சனநாயக பங்களிப்புகள் நடை முறைப்படுத்தப் பட்டுள்ளதா என்று ஆராய்ந்து பார்த்தோ மானால் 'இல்லை' என்கிற ஆய்வு முடிவு தான் 'கண்டறிந்தவைகளாக' ஆய்வில் கிடைக்கின்றன. எங்களது ஆய்வில் பெரும்பாலான தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் பினாமியாக இருப்பதும் கண்டறியப் பட்டுள்ளது. சாதி இந்துக்களின் கட்டளைக்கு அடிபணிந்து சுயமாக முடிவெடுக்க முடியாமல் அவதிப்படுகிற நிலையும் இப் பகுதிகளில் மிகுந்து காணப்படுகிறது.

குறிப்பாக நரியூத்து பஞ்சாயத்துத் தலைவர் திருமிகு. பழனி யம்மாள் பல்வேறு விதமான அடக்குமுறைகளுக்கும், பாகுபாடு களுக்கும் உட்படுத்தப்பட்டு வருகிறார். **கொடுவிலார்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் திருமிகு.சின்னவரதன் இன்னமும் தங்கள் பகுதிகளில் இழவுச் செய்தி சொல்லுவது, பிணத் திற்கு குழி வெட்டுவது போன்ற வேலைகளை செய்து வருவது எமது குழுவினருக்கு அதிர்ச்சியளித்துள்ளது.**

## சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்

தமிழக காவல்துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சமீபகாலமாக, தமிழகத்தில் தீண்டாமை வன்கொடுமைகள் பெரிய அளவில் இல்லை என்றும் சிலர் இவற்றை மிகைப்படுத்தி



வெளியிடுகிறார்கள் என்றும் கூறி வருவது உண்மைக்கு புறம் பானது. சில பத்திரிக்கைகளில் தலித்துகளும் சாதி இந்துக்களும் தேனீர்க் கடைகளில் சமமாக நாற்காலியில் அமர்ந்து தேனீர் அருந்துவது போன்ற புகைப்படம் வெளியிடப்பட்டு வருகின்றன. இத்தகைய புகைப்படம் கடந்த 3 மாத காலமாக தமிழகத்தில் வெவ்வேறு பகுதிகளில் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த புகைப்படத்தோடு ஒரு செய்தியும் தொடர்ந்து பதிவு செய்யப் படுகிறது. சமூக நீதி மற்றும் மனித உரிமை போலீசாரின் செயல் பாடுகளால் இத்தகைய சமத்துவம் கொண்டுவரப்பட்டுள்ளன என்கிற ரீதியில் இவை பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

தீண்டாமை இருப்பதை உறுதி செய்வது? அவற்றை எப்படி ஒழிப்பது? என்பதில் செயல் திட்டம் இருக்க வேண்டுமே தவிர உண்மையை மறுப்பதன் மூலம் மறைப்பதன் மூலம் எவ்வித தீர்வும் கண்டுவிட முடியாது. தீண்டாமை பாகுபாடுகள் என்பது சனநாயக விரோதப் போக்காகும் - சமூகத்தின் உச்ச கட்ட மனித உரிமை மீறலாகும். மனித சமூகத்தை பாகுபாட்டுடன் வைத் திருக்கக் கூடிய வடிவம்தான் தீண்டாமை. இவற்றைக் கண்டுபிடிப்பது, அந்த தீண்டாமைக் கொடுமைகளுக்கு ஆதாரமாக இருக்கக் கூடிய காரணிகள் என்ன, அவற்றை ஒழிப்பதற்காக கொண்டு வரப்பட்ட சட்டங்கள், கொள்கைகள், நடவடிக்கைகள் முறையாக செயல் படுகிறதா என்பதை ஆய்வு செய்வது உள்ளிட்ட செயல்பாடுகள் மூலம்தான் ஒரு முழுமையான தீண்டாமை ஒழிப்பு பணியினை கொண்டு செல்ல முடியுமே தவிர, தீண்டாமை இல்லை, பாகு பாடுகள் இல்லை என்று உண்மைக்கு புறம்பான செய்திகளை கூறுவதன் மூலம் தீண்டாமையை ஒழித்துவிட முடியாது. இந்த தீண்டாமை மெல்ல மெல்ல கனன்று பெரிய வன்முறைக்கும் இன மோதல்களுக்கும் அடிப்படை காரணமாக அமைந்து விடக்கூடிய ஆபத்து உள்ளது. ஆகவே தான் இதுபோன்ற வன்முறையை தடுக்க வேண்டும், கலவரங்கள் வந்து விடக்கூடாது என்கிற சமூக அக்கறையின் முன்னெடுப்புதான் இதுபோன்ற ஆய்வுகளே தவிர, வேறு எந்த நோக்கமும் எங்களைப் போன்ற சமூக ஆர்வலர் களுக்கு, சனநாயகவாதிகளுக்கு இருக்க முடியாது என்பதை வலுவாக சிவில் சமூக குழுக்களின் சார்பாக அரசுக்கும், மனித உரிமை ஆணையங்களுக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## பரிந்துரைகள்

✦ எட்டு மாவட்டங்களில் (மதுரை, சிவகங்கை, ஈரோடு, சேலம், கோயமுத்தூர், பெரம்பலூர், கடலூர், தேனி) உள்ள 386 ரிசர்வ் பஞ்சாயத்து பெயர் கிராமங்களிலும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகள் நடைபெறுகின்றன. ஆகவே தமிழக அரசு உடனடியாக இக்கிராமங்களை தீண்டாமை கிராமங்களாக வன்கொடுமை நடக்கக்கூடிய கிராமங்களாக அறிவிக்க வேண்டும்.

✦ எட்டு மாவட்டங்களில் உள்ள அனைத்து கிராமங்களிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 விதி 6ன் படி மாவட்ட ஆட்சித் தலைவரும் காவல் கண்காணிப்பாளரும் நேரடியாக சென்று தீண்டாமை மற்றும் வன்கொடுமைகள் நடைபெறுகின்றனவா என்பது குறித்த ஆய்வினை மேற்கொள்ளவேண்டும்.

✦ எட்டு மாவட்டங்களில் உள்ள 386 ரிசர்வ் பஞ்சாயத்துத் தலைவர்களையும் நேரிடையாக சந்தித்து பஞ்சாயத்தில் சுதந்திரமாக தன்னிச்சையாக செயல்பட முடிகிறதா என்பதை குறித்த ஆய்வினை அரசு நடத்த வேண்டும். இந்த ஆய்வு என்பது ‘காவல்’ சார்ந்த விசாரணை ஆய்வாக இல்லாமல் சமூக நீதிக் கண்ணோட்ட அடிப்படையில் உயர்நீதிமன்ற நீதிபதிகள், மனித உரிமை ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், சமூக ஆய்வாளர்கள், தலித் அரசு அதிகாரிகள் ஆகியோர் இடம் பெற வேண்டும்.

✦ எட்டு மாவட்டங்களில் உள்ள அனைத்து தேநீர்க் கடைகளிலும் மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சியர், காவல் கண்காணிப்பாளர் ஆகியோரை கொண்ட குழு நேரடியாக சென்று சோதனை மேற்கொண்டு ‘இரட்டை டம்ளர் தேநீர்க் கடைகளின்’ உரிமையாளர்கள் மீது குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் 1955, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 ஆகியவற்றின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✦ மாண்புமிகு ஊராட்சி துறை அமைச்சரும் மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சரும் உடனடியாக மாநில அளவில் ‘தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள்’ குறை கேட்கும் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அக்கூட்டத்தில்



கிடைக்கக்கூடிய உண்மைகளின் அடிப்படையில் சிறப்பு தீர்மானங்கள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

✦ தேசிய மனித உரிமை ஆணையமும் தேசிய தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் ஆணையமும், தேசிய பெண்கள் ஆணையமும், மாநில அரசோடு இணைந்து தீண்டாமை குறித்த பொது விசாரணை நடத்த முன்வர வேண்டும்.

✦ தமிழகத்தில் 1540 காவல் நிலையங்கள் இருக்கின்றன. இவற்றில் தீண்டாமை மற்றும் வன்கொடுமை வழக்குகள் எத்தனை பதிவு செய்யப்படுகின்றன? முறையாக பதிவு செய்யப்படுகின்றனவா? முறையாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றனவா? என்பது குறித்து காவல்துறை தலைவர் - (சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்) அவர்கள் முழுமையான ஆய்வினை மேற்கொள்ள வேண்டும்.

# பணித்தளங்களில் தலித்துகள் மீதான பாகுபாடு

தீண்டாமை ஓர் சமூகக் கொல்லி  என்கிற கூற்றினை எவரும் மறுக்க முடியாது. தேநீர்க் கடைகளில் இரட்டை குவளை முறை, தலித்துகள் கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுப்பு, பொதுப் பயன்பாடுகளில் உரிமை கேட்க கூடாது, பள்ளிக் கூடங்களில் பாகுபாடு, தலித் பஞ்சாயத்துத்தலைவர்கள் நாற் காலியில் உட்கார முடியவில்லை, படுகொலைகள், வீடுகள் நொறுக்கப்படுதல், தலித் பெண்கள் மீதான பாலியல் சித்திர வதைகள்  வன்புணர்ச்சிகள் என்று நாளும் நாளும் பல்வேறு தீண்டாமை சித்திரவதைகளும், வன்கொடுமைகளும் நடந்து கொண்டுதான் வருகின்றன. ஆனால் 1950-ல் இயற்றப்பட்ட நம்முடைய அரசியல் சாசனம் பிரிவு 17-ல் தீண்டாமை ஒழிக்கப் பட்டுவிட்டது என்றும்; தீண்டாமையை கடைபிடிப்பது குற்றம் என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. அரசியல் சாசனம் இயற்றப் பட்டு 60 ஆண்டு காலம் ஆகிவிட்டது. இதுபோக தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளை ஒழிப்பதற்கு 1955-ல் குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989-ல் தாழ்த்தப் பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் என்கிற இரண்டு சிறப்பு சட்டங்களும் உருவாக்கப்பட்டன.

சட்டங்கள் பெயரளவில் மட்டுமே உள்ளன. தீண்டாமை ஒழிப்புப் பணியில் அரசு தீவிரமாக ஈடுபடவில்லை என்று சமூக ஆர்வலர்களும் மனித உரிமை அமைப்புகளும் குரல் கொடுத்து வருகின்றன. ஆனால் இந்திய அரசோ தீண்டாமை ஒழிப்பு பணியில் அரசு முழுமையாக ஈடுபடுகிறது; தீண்டாமைகளை ஒழிக்க பல்வேறு செயல் திட்டங்களும், நீதி மன்ற கட்டமைப்பு களும் உருவாக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன என்று ‘பதில் குரலாக’ பதிவு செய்து வருகிறது.



சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் இந்திய அரசுப் பிரதிநிதிகளுக்கு இடையே நடைபெற்ற இவ்விவாதம் 2001-ல் உச்சகட்டம் அடைந்தது என்று கூறலாம். தென்னாப்பிரிக்கா டர்பன் நகரில் நடைபெற்ற அய்.நா.வின் அகில உலக இனப் பாகுபாட்டிற்கு எதிரான மாநாட்டில் சமூக செயல் பாட்டாளர்கள் ‘சாதியத்தை இனப்பாகுபாடாக அங்கீகரிக்க வேண்டும்’ என்று குரல் கொடுத்தனர். இந்திய அரசோ அதெல்லாம் அங்கீகரிக்க முடியாது. சாதிப்பாகுபாடே இந்தியாவில் நடைபெறவில்லை என்கிற அளவில் தம்முடைய கடுமையான எதிர்ப்பினை காட்டியது. இந்த விவாதம் இன்றைக் கும் உலக அளவில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன.

இந்நிலையில் சாதி குறித்த சில பொது பிரச்சாரங்கள் மக்கள் விவாதமாக மாறிவருகின்றன. முன்பு மாதிரி இப்பொழு தெல்லாம் யாரும் சாதி பார்ப்பது கிடையாது. எங்காவது ஒரு கிராமத்தில் நடக்கக்கூடிய சின்னப் பிரச்சனையைக் கூட பெரிதாக் குகிறார்கள். எஸ்சி. வீட்டு ஆட்களும், எஸ்டி. வீட்டு ஆட்களும் ரிசர்வேசனில் படித்து முன்னேறி விட்டார்கள். பலர் மருத்துவர்களாக ஆகி விட்டார்கள். இந்தியாவில் உச்சநீதி மன்றத்திலும் தலித் நீதிபதிகள் உள்ளனர். இப்பொழுதெல்லாம் பொருளாதாரம் இருக்கிறதா? இல்லையா? இதில்தான் பாகுபாடு காட்டுகிறார்கள் என்று பேசப் பட்டும் விவாதிக்கப்பட்டும் வருகின்றன. அதுமட்டுமல்லாமல் கூடவே ரொம்பவும் நியாய மாக இருப்பதுபோல் ஓர் வெகுஜன சமூக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டும் வருகின்றன. அதாவது “பன்னாட்டு நிறுவனங்களும், கணினி மென்பொருள் துறையும், காட்சி ஊடகங்களும் வளர்ந்து நிற்கின்றன. பல்வேறு நிலையில் மக்கள் முன்னேறிவிட்டார்கள். எங்காவது ஒரு கிராமத்தில் தீண்டாமை நடக்கலாம் குறிப்பாக கண்டிப் பாக படித்தவர்கள் இடத்திலும் நல்ல வேலையில் இருக்கக் கூடிய நபர்களிடத்திலும் தீண்டாமை கடைபிடிக்கப் படுவதில்லை” என்று பேசப்படுகிறது.

**“இதெல்லாம் மேம்போக்குப் பார்வை; என்னதான் படித்து பட்டம் பெற்று ஜில்லா கலெக்டராக ஆனாலும் தீண்டாமை கடைப்பிடிக்கப்படுகிறது”** என்று சமீபத்தில் சென்னையில் நடந்த எஸ்.சி., எஸ்.டி. பணியாளர்கள் மாநாட்டில் தலித் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பகிரங்கமாக குரல் எழுப்பி உள்ளனர்.

இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு எமது எவிடன்ஸ் அமைப்பு பல்வேறு தீண்டாமை சம்பந்தமான ஆய்வு களை கடந்த இரண்டு வருடங்களாக தமிழகத்தில் நடத்தி வருகிறது. குறிப்பாக இதுவரை 600 ரிசர்வ் பஞ்சாயத்துகளில் தீண்டாமை கடைப்பிடிக்கப்பட்டு வருவதை தகுந்த ஆதாரங்க ளோடு கண்டறிந்து வெளியிட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல் 300க்கும் மேற்பட்ட வன்கொடுமை சம்பவங்களில் களஆய்வு செய்து - நீதிமன்றங்களில் சட்ட தலையீடும் மேற்கொண்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாகத்தான் தற்போது "பணித்தளங் களில் தலித்துகள் மீதான பாகுபாடு" என்கிற ஆய்வு கடந்த ஜனவரி - பிப்ரவரி 2009 மாதங்களில் நடத்தப்பட்டது. **தமிழகத் தில் 77 தலித் அதிகாரிகளும், பணியாளர்களும் தங்கள் மீது சாதியப்பாகுபாடு காட்டப்படுகின்றன என்பதை பகிரங்கமாக கையெழுத்துப்போட்டு வாக்குமூலம் கொடுத்துள்ளனர். இதையே எங்களது ஆய்வின் முக்கிய ஆதாரமாகவும், நம்பகத்தன்மை தர நிர்ணயங்களாகவும் எமது எவிடன்ஸ் அமைப்பு கருதுகிறது.**

## ஆய்வின் நோக்கமும் வரையறையும்

தலித்துகள் மீதான தீண்டாமை பாகுபாடுகள் மற்றும் வன்கொடுமைகள் குறித்து பல்வேறு ஆய்வுகள் மாநில அளவிலும் தேசிய அளவிலும் நடத்தப்பட்டுள்ளன. நடத்தப்பட்டும் வருகின்றன. ஆனால் தலித் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் மீதான பாகுபாடுகள் என்கிற ஆய்வு தமிழக அளவில் முதன் முறையாக நடத்தப்பட்டுள்ளன.

அரசு பணித்தளங்களில் தலித் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் மீதான சாதியப் பாகுபாடுகளை கண்டறிவது. அதற்கான காரணங்கள் சூழல்கள் குறித்து ஆராய்வது. சாதியப் பாகுபாடுகளுக்கு எதிராக பணித்தளங்களில் நடவடிக்கை எடுப்பதற்கான செயல் திட்டங்களை எப்படி உருவாக்குவது. உள்ளிட்ட நோக்கங்களை மையப்படுத்தி இவ்வாய்வு நடத்தப் பட்டுள்ளது.

சாதியப்பாகுபாடு அடிமட்ட நிலையில் மட்டுமல்ல, அது எல்லா நிலையிலும் இருக்கிறது - என்பதை உறுதிபடுத்துவது.



அதற்கான ஆதாரங்களை திரட்டுவது என்கிற "செயல்பாட்டு நோக் கங்களாக" இந்த ஆய்வின் முக்கிய கோட்பாடாக எமது எவிடன்ஸ் அமைப்பு சிவில் சமூகத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

கடந்த 1969-ல் அய்.நா.வின் அகில உலக இனப்பாகுபாட் டிற்கு எதிரான உடன்படிக்கையில் இந்திய அரசு கையெழுத்திட் டிருந்தும், பாகுபாடுகளை ஒழிப்பதில் போதிய அக்கறையும், நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்கிற உண்மைகளை ஆதாரமாக்கும் ஓர் முயற்சியாகவும் இந்த ஆய்வினை எடுத்துக் கொள்ளலாம்.

## ஆய்வு எல்லைகளும் முறைகளும்

மதுரை, சிவகங்கை, திருநெல்வேலி, தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், திருச்சி, நாகப்பட்டிணம், புதுக்கோட்டை, தருமபுரி, சேலம், வேலூர், கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு மாவட் டங்களில் இவ்வாய்வு நடத்தப்பட்டுள்ளது. ஐந்து பாகங்களைக் கொண்ட 58 கேள்விகளை உள்ளடக்கிய படிவம் மூலமாக எமது களஆய்வு குழுவினர் 'நான்கு குழுக்களை' கொண்டு இவ்வாய் வினை மேற்கொண்டுள்ளனர். எமது குழுவினர் சந்தித்து நேர் காணல் நடத்திய 77 தலித் அதிகாரிகளும் மற்றும் பணியாளர் களும் தங்கள் மீது காட்டப்படுகிற சாதிப்பாகுபாடு அதன் பின்னணி, பாதிப்புகள், சட்ட தலையீடுகள் உள்ளிட்ட பல்வேறு கேள்விகளுக்கும் பதில் எழுதி அதில் கையொப்பமும் போட்டுக் கொடுத்துள்ளனர்.

சில அதிகாரிகள் தங்கள் பெயர் மற்றும் பதவிகளை வெளி யிட வேண்டாம் என்று கூறியுள்ளனர். ஆகவே ஒட்டு மொத்த அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் முகவரிகளை நாங்கள் வெளியிட விரும்பவில்லை. ஆய்வில் 'நேர்காணல்' செய்யப்பட்ட தலித் அதிகாரிகளின் பெயர், பதவி உள்ளிட்ட விபரங்களும் அவர்கள் மீதான 'பாகுபாடு' மீறல்களும் மட்டும் வெளியிடப் பட்டுள்ளன.

## ஆய்வில் கண்டறிந்தவைகள்

நாங்கள் ஆய்வு செய்த 77 தலித் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களில் ஐந்து பேர் மட்டும் பெண்கள் (6.5 சதவீதம்). 72 பேர் ஆண்கள் (93.5 சதவீதம்). 77 தலித்துகளில் 59 பேர் பறையர்

(76.6%) சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 11 பேர் (14.2%) பள்ளர்களாகவும் (தேவேந்திரகுல வேளாளர்கள்), 07 பேர் (9.9%) அருந்ததியர் களாகவும் உள்ளனர். இவர்களில் 63 பேர் (81.8%) அரசு நிறுவனங் களிலும் 14 பேர் (18.2%) அரசு சார்பு நிறுவனத்திலும் பணி செய்கின்றனர்.

கல்வி, கால்நடை, விவசாயம், நெடுஞ்சாலை, வருமான வரி, வருவாய், பொது நிறுவனம், வங்கி, மருத்துவம், மின்சாரம், நீதி, வேலை வாய்ப்பு, சுகாதாரம், பத்திரப்பதிவு, மாநகராட்சி, கிராமப் புற மேம்பாடு, கூட்டுறவு என்று பல்வேறு துறைகளைச் சேர்ந்த வர்கள் வாக்குமூலம் கொடுத்துள்ளனர். இவர்களில் 06 பேர் மருத்துவர்கள், 05 பேர் கால்நடை மருத்துவர்கள். பேராசிரியர்கள், உதவி தாசில்தார், ஆசிரியர்கள், வங்கி மேலாளர்கள், தலைமை ஆசிரியர்கள், எழுத்தர்கள் என்று பலரும் உள்ளனர். 05 பேர் கிராம நிர்வாக அதிகாரிகளாக உள்ளனர். 77 பேரில் 53 (68.83%) பேர் தொழிற்சங்கங்களில் பொறுப்பாளராகவோ, உறுப்பினராகவோ உள்ளனர். இதில் 18 பேர் எஸ்.சி.எஸ்.டி தொழிற்சங்கத்தில் பொறுப்பாளராக உள்ளனர்.

77 பேரில் 06 பேர் எம்.பி.பி.எஸ். (7.79%) படித்தவர்கள். 29 பேர் (37.7%) முதுகலை மற்றும் M.Phil., Ph.D படித்தவர்கள். கால் நடை மருத்துவம் 5 பேர், இளங்கலை படித்தவர்கள் 8 பேர் (10.38%). இதுபோக பி.இ., டிப்ளமோ, பி.யூ.சி., எஸ்.எஸ்.எல்.சி என்று படித்த வர்கள் பலரும் உள்ளனர்.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 77 தலித்துகளில் 75 பேர் (97%) தங்கள் மீது நேரடியான சாதியப் பாகுபாடு பணித் தளங்களில் கடைப்பிடிக்கப்படுகிறது என்று கூறியுள்ளனர். இவர்களில் 29 பேர் (37.6%) பணி ரீதியான பாகுபாடுகளுக்கும், 23 பேர் (29.8%) தோற்றம் ரீதியான பாகுபாடுகளுக்கும் உட்படுத்தப் பட்டுள்ளனர். ஐந்து பெண்களில் 03 பெண்கள் தங்கள் மீது பாலின பாகுபாடுகள் நடத்தப்படுகின்றன என்று கூறியுள்ளனர். சாதி சாராத பாகுபாடுகளிலும் சாதி ரீதியான கண்ணோட்டத் தின் அடிப்படையிலேயே நடத்தப்படுவதாக 61 பேர் (79.2%) கூறியுள்ளனர்.

இதில் முக்கியமானது என்னவென்றால் 77 பேரில் 62 பேர் (80.5%) சாதி ரீதியான வன்கொடுமை சம்பவங்களால் (Atrocity incident ) பாதிக்கப்பட்டுள்ளனர்.



## உடல் மற்றும் மன ரீதியான பாதிப்புகள்

சாதியப் பாகுபாட்டினால் 77 பேரில் 53 பேர் (68.8%) உணர்வு ரீதியாகவும், 25 பேர் (32.4%) அவமானப்படுத்தப்பட்டும், 09 பேர் (11.6%) பயந்த நிலையிலும்; 07 பேர் (9.09%) தனிமைப் படுத்தப்பட்டும் இருப்பதாக எமது குழுவினரிடம் கூறியுள்ளார்கள்.

சாதியப்பாகுபாட்டினால் பதவி உயர்வு கிடைக்காதவர்கள் 25 பேர் (32.46 %), இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் 15 பேர் (19.4%), பணி இடைநீக்கம் செய்யப்பட்டவர்கள் 05 பேர் (6.49%), இதுபோக விசாரணை, மெமோ, சம்பளம் பிடித்தல் என்று பல் வேறு இழப்புகள் தலித் பணியாளர்கள் அனுபவித்து இருப்பதாக கூறியுள்ளனர்.

தங்களுக்கு நடந்த சாதியப் பாகுபாட்டினால் தங்களது குடும்பமும் பாதித்து இருப்பதாக 62 பேர் (80.5%) கூறியுள்ளனர். 77 பேரில் 54 பேர்களின் மனைவிகளும், 43 பேர்களின் மகன்களும், 32 பேர்களின் மகள்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். 16 பேரின் அம்மாக்களும், 13 பேரில் அப்பாக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தங்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்த நபர்கள் உள்ளனர் என்று 28பேர் ஒப்புக் கொண்டுள்ளனர். இதுமட்டுமல்ல தங்களுக்கு நீதி கேட்டு போராடிய அமைப்புகளும் உண்டு எனவும் பதிவு செய்துள்ளனர். 30 பேர் தங்களுக்கு ஆதரவாக தொழிற் சங்கங்கள் குரல் கொடுத்துள்ளன என்று கூறியுள்ளனர். இதில் பெரும்பாலான பங்கு எஸ்.சி.எஸ்.டி. தொழிற்சங்கங்களுக்கு உண்டு என்கிற கூடுதல் தகவலையும் பாதிக்கப்பட்டவர்கள் கூறியிருக்கின்றனர்.

தங்களுக்கு எதிராக சாதி இந்துக்கள் கும்பல் கும்பலாக செயல்பட்டார்கள் என்று 46 பேர் (59.7%) கூறியுள்ளனர். இதில் கொடுமை என்னவென்றால் 24 பேர் தங்களுக்கு எதிராக சாதி இந்து அமைப்புகளும், சில தொழிற்சங்கங்களும் செயல்பட்டன என்றும், அதில் சில முற்போக்கு தொழிற்சங்கங்களும் உண்டு என்கிற அதிர்ச்சி தகவலையும் பதிவு செய்துள்ளனர்.

## பெண்களுக்கு எதிரான வன்முறை

நாங்கள் ஆய்வு செய்த 5 பெண்களில் 4 பேர் (80%) தங்கள் மீது பணித் தளங்களில் சாதி இந்து ஆண் உயர் அதிகாரிகளால் வன்முறை நடத்தப்படுகிறது என்று கூறியுள்ளனர்.

77 பேரில் 61 பேர் தங்களது பணித் தளங்களில் தலித் பணியாளர்களுக்கும் பாகுபாடு காட்டப்படுகிறது என்று கூறியுள்ள னர். தலித் பணியாளர்கள் பொதுக் கழிப்பறையை பயன்படுத்தக் கூடாது என்று முறைமுகமாக அச்சுறுத்தப்படுவதாகவும், தலித் பணியாளர்கள் பொதுக் குவளையில் நீர் அருந்துகிறார்கள் என்பதற்காகவே சாதி இந்து பணியாளர்கள் தனியாக தண்ணீர் பிடித்து வருவதாகவும் பாதிக்கப்பட்ட தலித்துகள் எமது குழுவினரிடம் கூறியுள்ளனர்.

77 பேரில் 47 பேர் (61.03%) தங்கள் மீதான பாகுபாடு களுக்கு உரிய அதிகாரிகளிடம் புகார் கொடுத்திருப்பதாக கூறியுள்ளனர். இதில் 4 பேர் மட்டும் தங்களது பிரச்சனைகளுக்கு ‘சாதாரண தீர்வு’ கிடைத்துள்ளது என்று கூறியுள்ளனர். 47 பேரில் 35 பேர் உயர் அதிகாரிகளுக்கும், 20 பேர் துறை இயக்குனருக்கும் புகார் கொடுத்துள்ளனர். தேசிய மனித உரிமை ஆணையத்திற்கு புகார் அனுப்பியதாக இரண்டு பேர் (2.5%) கூறியுள்ளனர். தேசிய, மாநில பெண்கள் ஆணையத்திற்கு புகார் எதுவும் அனுப்பப்பட வில்லை. மாநில மனித உரிமை ஆணையத்திற்கு 6 பேர் புகார் அனுப்பி யுள்ளனர். நீதிமன்றத்தில் 13 பேர் (17%) வழக்கு பதிவு செய்திருப் பதாக கூறியுள்ளனர்.

## வாக்குமூலங்களில் சில பகுதிகள்

### 1. டாக்டர் திரு. ஆனந்த் (33)

எங்களது மருத்துவமனையில் தலித் மற்றும் தலித் அல்லாத நோயாளிகள் என்று இரண்டு பிரிவாக பிரித்து தலித் நோயாளிகளை மட்டும் என்னிடம் சிகிச்சைக்காக அனுப்பி வைப்பார்கள். தலித், தலித் அல்லாத நோயாளிகள் என்று எப்படி பிரிக்கின்றார்கள் என்று கேட்டபோது, முகவரி, கிராமம், தோற்றம், பேச்சு இதையெல்லாம் வைத்து தீர்மானித்து பிரிக் கிறார்கள் என்று கூறினார். இது மட்டுமல்லாமல் இடஒதுக்கீடு மூலமாக வந்த டாக்டரால் நன்றாக சிகிச்சை அளிக்க முடியாது



என்று என்னை வைத்துக் கொண்டே சக மருத்துவர்களும், ஊழியர்களும் விமர் சனம் செய்கிறார்கள். என்னுடைய கார் அடிக்கடி மருத்துவமனை ஊழியர்களால் சேதப்படுத்தப்பட்டு வருகிறது என்றும் கூறினார்.

சாதி பாகுபாடு இப்போது மட்டும் நான் அனுபவிக்க வில்லை. படிக்கிற காலத்திலேயே அனுபவித்து இருக்கிறேன். நான் M.S படித்துக் கொண்டிருந்தபோது, நன்றாக என்னிடம் பழகிய சாதி இந்து மருத்துவர் ஒருவருக்கு நான் தலித் என்று தெரிந்ததும் என்னிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டார் என்று வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளார்.

### 2.திரு.கோவிந்தசாமி (48) எம்.எஸ்.சி., எம்.எட், எம்.பி.எல்

என்னுடைய தலைமை ஆசிரியர் சாதி ரீதியாக என்னை தரக்குறைவாக பேசுகிறார். நல்ல உடை அணிந்து சென்றால் பல ஆசிரியர்கள் முன்னிலையிலேயே கேலி பேசுவார். இதனால் நான் மன ரீதியாக பாதிக்கப்பட்டு, தூக்கம் இல்லாமல் அவதிப்பட்டு வருகிறேன். தற்போது தூக்க மாத்திரை இல்லை என்றால் என்னால் தூங்க முடியாது. இவரால் சாதி இந்து மாணவர்கள் என்னை மதிப்பது கிடையாது.

### 3.திரு. சுப்பிரமணி, புள்ளியல் துறை

செல்போனில் காலர் டோன் பாட்டாக “நான் ஆணை யிட்டால்” என்கிற பாட்டினை வைத்திருந்தேன். இந்தப் பாட்டை எப்படி நீ வைக்கலாம். பாட்டின் மூலமாக ஆணையிடப் பார்க் கிறாய் என்று என்னுடைய மேலதிகாரி கோபமாகப் பேசினார். என் மீது பொய்ப்புகார் தெரிவித்து வழக்கு பதிவு செய்கிற அளவிற்கு சாதி இந்து அதிகாரிகள் பணியிடங்களில் நடந்து கொள்கிறார்கள். மன அழுத்தத்தால் ஒரு நாள் நான் அந்த அதிகாரியின் காலில் விழுந்து அழுதேன். என் செருப்பை எடுத்து நானே அடித்துக் கொண்டு அழுது என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்தேன். என்னிடம் நேரடியாக சாதியப் பாகுபாட்டை காட்ட முடியாததால், உயர் அதிகாரிகளுக்கு நான் மரியாதை கொடுப்பது கிடையாது என்று என் மீது குற்றம் சுமத்தி வருகின்றார்.

### 4.டாக்டர் கலா, அரசு மருத்துவர்

டாக்டர்களை அழைத்து கூட்டம் போடும் போது வேண்டுமென்றே எனக்கு உட்கார நாற்காலி கொடுக்க மாட்டார்கள். நான் உட்கார நாற்காலி தேடினால், கூட்டம் சிறிது நேரத்தில் முடிந்து விடும் என்று கூறியே என்னை நிற்க வைத்து வருகின்றனர்.

### 5. திரு. முருகேசன், வட்டார வளர்ச்சி அலுவலர்

காசோலையில் ஊழல் நடந்து இருப்பதை கண்டுபிடித்த தற்காக என்னை கடுமையாக அடித்து சித்திரவதை செய்தனர். சாதி ரீதியாக இழிவாகவும் பேசினர்.

## ஆய்வின் முடிவுகள்

தலித் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் மீது பணித் தளங்களில் நடத்தப்படுகிற பாகுபாடு சம்பவங்கள் அதிர்ச்சியளிக் கக்கூடியதாக உள்ளன. சாதி ரீதியாக இழிவாகப் பேசுவது, புறக் கணிப்பது, தரக் குறைவாக நடந்து கொள்வது என்பது அன்றாட நிகழ்வாக உள்ளது. திரு.பச்சமுத்து என்பவர் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக உள்ளார். இவர் தண்ணீர் கேட்டால் கூட, கீழ்நிலை சாதிஇந்து ஊழியர்கள் தண்ணீர் எடுத்து தர மாட்டார்களாம். இவருடைய இரண்டு சக்கர வாகன டயர் பல நாட்களாக கிழிக்கப்பட்டு வருகிறதாம். யாரையும் உத்தரவு வாங்கி இதுவரை வேலை செய்தது கிடையாது என்று கூறுகிறார். இவருக்கு கீழ் உள்ள சாதி இந்து அதிகாரியை தான் மற்ற பணியாளர்கள் அதிகாரியாக மதிக்கிறார்கள் என்று கூறினார்.

இதுபோன்று பல்வேறு அதிகாரிகளும், பணியாளர்களும் எமது குழுவினரிடம் தங்களது பாதிப்புகளை விளக்கமாக எழுதி வாக்குமூலம் கொடுத்துள்ளனர். ஒரு விதமான அச்ச உணர்வுடன், தாழ்வு மனப்பான்மையுடன் பணி செய்வதாக பலரும் கூறியுள்ளனர்.

என்ன படித்து இருந்தாலும், எவ்வளவு பெரிய உயர் பதவியில் இருந்தாலும் ‘சாதியப் பாகுபாடு’ காட்டப்படுகிறது என்பதற்கு இந்த ஆய்வு ஆதாரமாக விளங்குகிறது. சில அரசு நிறுவனங்கள் தலித் மற்றும் தலித் அல்லாதோர் என்று இரண்டு பிரிவுகளாக செயல்படுவதை நம்மால் உணர முடிகிறது. ஆகவே சாதியப்பாகுபாடு குறைந்துள்ளது, ஒழிந்துள்ளது என்கிற வாதத்



திற்கு இடமில்லை - என்று சிவில் சமூக குழுக்கள் சார்பாக அரசிற்கு எமது எவிடன்ஸ் அமைப்பு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

குழந்தைகள், தலித்துகள், பெண்கள், ஆதிவாசிகள், சிறு பான்மையினர் உள்ளிட்ட சமூகக் குழுக்கள் மீதான வன்முறைகள் குறித்து சர்வதேசிய அளவில் பேசப்பட்டும், விவாதிக்கப்பட்டும் வருகின்றன. ஆகவே மேற்குறிப்பிட்ட சமூக குழுக்கள் மீதான உரிமைகள் சம்பந்தமாகவும் மனித உரிமை தர நிர்ணயங்கள் குறித்தும் சர்வதேசிய சிவில் சமூக குழுக்களுக்கும் உலக நாடு களுக்கும் நம்முடைய அரசு பதில் சொல்கிற கடப்பாட்டிற்கு உட் பட்டிருக்கிறது. ஆகவே தான் தீண்டாமை, குழந்தை தொழிலாளர், பெண்கள் மீதான வன்முறைகள், மதக் கலவரங்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் நடைபெறவில்லை என்றும், அப்படியே சிறிய அளவில் நடந்தாலும் அவற்றிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என்று அரசு பிரதிநிதிகள் கூறி வருகிறார்கள். ஆனால் உண்மை முற்றிலும் மாறாக இருக்கிறது. இருக்கக்கூடிய - நிலவக்கூடிய பிரச்சனைகளை, மீறல்களை பகிரங்கமாக ஒப்புக் கொண்டால் தான் அதற்கான தீர்வினை அடைய முடியும். பிரச்சனை யில்லை, எல்லாப் பிரச்சனைகளுக்கும் நடவடிக்கை எடுக்கப்படு கிறது என்கிற பதில்கள் பிரச்சனையை தீர்த்துவிடாது. ஆகவே தான் இதுபோன்ற மனித உரிமை மீறல்களில் அரசின் தலையீடு மெத்தனமாக இருக்கிறது என்பதை சிவில் சமூகத்திற்கு நாங்கள் தெரியப்படுத்த விரும்புகிறோம்.

அரசின் அறிவிப்பு, சட்டங்கள், கொள்கைகள், அரசியல் சாசனங்கள் உள்ளிட்ட சட்ட மற்றும் மனித உரிமை தர நிர்ணயங் கள் இருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தினால்தான் முழுமை யான சமூக பலனை அடையமுடியும். அரசு அதிகாரிகளுக்கே, பிரதிநிதிகளுக்கே தீண்டாமை கடைப்பிடிக்கப்படுகிறது என்றால் சாதாரண சாமான்யர்களின் நிலை என்னவாக இருக்கும் என்பதை ‘அரசின் கொள்கை திட்ட நடைமுறையாளர்கள்’ புரிந்துகொள்ள வேண்டும்.

## பரிந்துரைகள்

✦ தலித் அரசு அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் மீது நடத்தப்படுகிற பாகுபாடுகள் குறித்து அரசு விரிவான ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். இந்த ஆய்வின் முடிவுகளை ‘வெள்ளை அறிக்கையாக’ வெளியிட வேண்டும்.

✦ தலித் அரசு அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் மீது நடத்தப்படுகிற பாகுபாடுகளுக்கு எதிராக ஒவ்வொரு மாவட்டத்திலும் “சாதியப் பாகுபாட்டு குறை தீர்க்கும் குழுவினை” ஏற்படுத்த வேண்டும்.

✦ ஐந்துக்கும் மேற்பட்ட தலித் அதிகாரிகள் பணியாளர்கள், பணி செய்யக்கூடிய அலுவலகங்கள், நிறுவனங்களில் ‘சாதியப் பாகுபாட்டு கண்காணிப்புக்குழுக்களை‘ ஏற்படுத்த அரசு உத்தரவிட வேண்டும். இதன் தலைவர் தலித்தாக இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

✦ பணியிடங்களில் நடத்தப்படுகிற சாதியப்பாகுபாட்டின் வடிவங்களை எஸ்.சி., எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989-ல் இணைத்துக் கொள்வதற்கு சட்டத் திருத்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும். இதற்கு மாநில அளவிலான, தேசிய அளவிலான எஸ்.சி., எஸ்.டி. பணியாளர் அமைப்புகள் அரசிற்கு அழுத்தம் கொடுக்க பல்வேறு சனநாயக சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



# ஜாதியால் திணிக்கப்படும் இழிதொழில்கள்

தொழில் மற்றும் பிறப்பின் அடிப்படையில் காட்டப்படுகிற பாகுபாடே இனப்பாகுபாடு என்கிற கூற்று உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஐ.நா.வின் அனைத்துவகை இனப்பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கையிலும் இவை உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் தொழில் மற்றும் பிறப்பின் அடிப்படையில் பல்வேறு தீண்டாமை சித்திரவதைகளாலும் வன்கொடுமைகளாலும் பாதிக்கப்பட்டு வருகிற தலித் மக்கள் மீதான பாகுபாடு இனப் பாகுபாடு இல்லை என்று சர்வதேசிய சிவில் சமூகத்திற்கு நம்முடைய இந்திய அரசு பதில் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறது. இதற்கு வலுசேர்ப்பது போன்று தொழிலுக்கும் சாதியத்திற்கும் சம்பந்தமில்லை என்கிற வாதமும் இன்றைக்கு முன்வைக்கப்படுகின்றன.

பொருளாதாரம் அதிகமுள்ள, சமூகத்தில் கௌரவமிக்க, வணிகச் சந்தையில் உலக தரத்தை தீர்மானிக்கக்கூடிய பல்வேறு தொழில்கள் இங்கிருந்தாலும் அத்தொழில்களில் ஈடுபடுபவர்கள் யார்? பிணவறையில் பணி, மலம் அள்ளுதல், கழிவுகளை அகற்றுதல் உள்ளிட்ட இழிதொழில்களில் ஈடுபடுபவர்கள் யார்? தொழில்களும் சாதிய அடுக்குகளை தீர்மானிக்கின்றன என்பதை மறுக்க முடியுமா? கையால் மலம் அள்ளுதல் குறித்து மாநில அளவிலும் தேசிய அளவிலும் பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வுகளில் இதுபோன்ற தொழில்களில் ஈடுபடுவது 95 விழுக்காட்டிற்கு மேல் தலித்துகள் என்பதும் இத்தொழிலில் ஈடுபடுவதனால் எவ்வித அவலங்களையும் சமூக கொடூரங்க ளையும் அனுபவித்து வருகின்றனர் என்பது குறித்தும் கண்டறியப் பட்டுள்ளன. இதுபோன்ற பல இழிதொழில்களும் இங்கு உள்ளன. ஆனால் இத்தொழில்களின் வகைகள் குறித்தோ அவலங்கள் குறித்தோ, மீறல்கள் குறித்தோ ஆய்வுகள் என்பது குறைந்த அளவே உள்ளன.

கொத்தடிமை தொழிலாளர்கள், குழந்தை தொழிலாளர்கள், குழந்தை கடத்தல் போன்ற நிலைகளில் பல ஆய்வுகள் நடத்தப் பட்டிருக்கின்றன. ஆனால் கழிவுகளிலும் இறப்பு சடங்குகளிலும் மலத்திலும் துர்நாற்றத்திலும் செய்யக்கூடிய பல தொழில்களின் அவலநிலைகளை "தனிவகையாக" ஆய்வு செய்யப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. இதனடிப்படையில் இதுபோன்ற இழிதொழில்கள் எத்தனை வகைகள் உள்ளன. இத்தொழில்களில் ஈடுபடுபவர்கள் தலித்துகள் மட்டும்தானா? பிற சமூகத்தினரும் ஈடுபடுகிறார்களா? இதுபோன்ற தொழிலில் ஈடுபடுவதனால் என்னவிதமான பாதிப்புகளை தொழிலாளர்கள் அடைகிறார்கள் என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டுமென்று எமது எவிடன்ஸ் அமைப்பு முடிவு செய்தது.

இதனடிப்படையில் இழிதொழில்கள் மீதான மீறல்கள் என்கிற ஆய்வினை எமது எவிடன்ஸ் அமைப்பு கடந்த பிப்ரவரி 2010 மாதத்தில் 303 தொழிலாளர்களிடத்தில் நடத்தியுள்ளது. அனைத்து தரப்பினரிடம் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டாலும் அனைவருமே தலித் தொழிலாளர்களாக உள்ளனர் என்பது அதிர்ச்சியாக இருந்தது.

**இதற்கிடையில் கடந்த 18.02.2010 அன்று சென்னையில் தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்தின் துணைத் தலைவர் திருமிகு.என்.எம்.காம்ப்ளே அவர்கள், "தமிழகத்தில் மனித கழிவை மனிதனே அள்ளும் நிலை இல்லை என்று தமிழக அரசு தெரிவிக்கிறது. ஆனால் அந்த நிலைமை தமிழகத் தில் இருப்பதற்கான புகைப்பட ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன" என்று கூறியிருந்தார். இதற்கு மறுப்பு தெரிவித்து மறுநாள் 19.02.2010 அன்று தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர். மு.கருணாநிதி அவர்கள் பதிலறிக்கை வெளியிட் டிருந்தார். அதில் "எப்போதோ எடுத்த புகைப்படத்தை வைத்துக் கொண்டு தமிழக அரசை திருமிகு.என்.எம்.காம்ப்ளே குறை கூறியுள்ளார். தமிழகத்தில் சாக்கடைகளில் மனிதர்கள் இறங்குவது இல்லை. இந் நிலையில் இதுபோன்ற கருத்து சொல்லியிருப்பது வருந்தத்தக்கது என்றும் இக்கருத்திற்கு எதிராக பிரதமர் திருமிகு.மன்மோகன்சிங் அவர்களிடம் புகார் தெரிவிப்பேன்" என்றும் கூறியிருந்தார்.**



இந்த இரண்டு அறிக்கைகளும் பத்திரிக்கைகளில் வெளி வந்த நேரத்தில் சாக்கடையில் இறங்கி பணி செய்கிற தொழிலாளர் களிடத்திலும், கையால் மலத்தை அள்ளுகிற மனிதர்களிடத்திலும் எமது ஆய்வு குழுவினர் வாக்குமூலம் வாங்கிக் கொண்டிருந்தனர். அக்கொடிய அவலநிலை குறித்து புகைப்படங்களும் எடுத்துக் கொண்டிருந்தனர் என்பதை இங்கே நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## ஆய்வு எல்லைகளும் முறைகளும்

மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர் ஆகிய 4 மாவட்டங் களில் சில பகுதிகளில் மட்டும் இழிதொழில்கள் மீதான மீறல்கள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. மூன்று பாகங்களைக் கொண்ட 51 கேள்விகளை உள்ளடக்கிய படிவங்கள் மூலமாக எமது குழுவினர் 5 குழுக்களாக கொண்டு 303 தொழிலாளர்களிடத்தில் இவ்வாய்வினை மேற்கொண்டனர். இவர்களில் 212 பேர் ஆண்கள், 91 பேர் பெண்கள். இவற்றில் தலித்துகள் 289, கிறிஸ்துவ தலித்துகள் 12, பழங்குடியினர் 2.

## இழிதொழில்களின் வகைகள்

303 தொழிலாளர்களில் பிணவறையில் 10 தொழிலா ளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பிணங்களை அப்புறப்படுத்தும் பணியில் 135 தொழிலாளர்களும், இறந்த கால்நடைகளை அப்புறப்படுத்துவதில் 186 பேரும், தப்படிக்க கட்டாயப்படுத்து தலில் 60 பேரும், பிணத்தை எரித்தல், புதைத்தல் 130 பேரும், இறப்பு செய்தி சொல்லுதலில் 105 பேரும், மலம் அள்ளுவதில் 131 பேரும், சாக்கடையை சுத்தப்படுத்துவதில் 200 பேரும், குப்பைகளை அள்ளுவதில் 205 பேரும், கழிவுகளை அகற்றுவதில் 168 பேரும், கழிவறை சுத்தப்படுத்துதலில் 154 பேரும், தோல் பதனிடுதல் பணியில் 12 பேரும், இறப்பு சடங்கில் கழிவுகளை அகற்றும் பணியில் 96 பேரும் ஈடுபட்டு வருகின்றனர். 303 தொழிலாளர் களில் பல தொழிலாளர்கள் ஒரே தொழிலை செய்யாமல் மலம் அள்ளுதல், கழிவுகளை அகற்றுதல், சாக்கடையை சுத்தப் படுத்துதல் உள்ளிட்ட பல தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். மேற் குறிப்பிட்ட தொழில்களில் ஒரே தொழிலில் ஈடுபட்டிருப்பவர் சிலர் மட்டுமே. பெரும்பாலோனோர் பல தொழில்களை சேர்த்து பணிபுரிகிற நிலை உள்ளது.

## உழைப்பு நேரமும் பணித்தளமும்

303 தொழிலாளர்களில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 5 மணி நேரத்திற்குள் உழைப்பவர்கள் 33 பேர், 5 - 8 மணி நேரம் உழைப்பவர்கள் 181 பேர், 8-12 மணி நேரம் உழைப்பவர்கள் 43 பேர், 12 மணி நேரத்திற்கு மேல் உழைப்பவர்கள் 43 பேர். மூன்று பேரின் உழைப்பு நேரம் கண்டறிய முடியவில்லை. உழைப்பிற்கான ஊதியம் ரூ.400லிருந்து ரூ.13,000 வரை மாதச் சம்பளம் வாங்குவது கண்டறியப்பட்டுள்ளது. பெரும்பாலானோர் 4000, 6000, 8000 வாங்குகின்ற தொழிலாளர்களும் உள்ளனர்.

303 தொழிலாளர்களில் கிராம அளவில் பணி செய்பவர்கள் 63 பேர். பஞ்சாயத்து அளவில் பணி செய்பவர்கள் 104 பேர், நகராட்சி அளவில் பணி செய்பவர்கள் 56 பேர், மாநகராட்சி அளவில் செய்பவர்கள் 80 பேர்.

303 தொழிலாளர்களில் முதலாளிகளின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளவர்கள் 91, ஒப்பந்தக்காரர்களின் கீழ் 52 பேர், அரசு பணியில் 119 பேர், சுயமாக 47 பேர், தனியார் நிறுவனத்தில் 12 பேர் என்று பணிபுரிந்து வருகின்றனர்.

303 தொழிலாளர்களில் 127 தொழிலாளர்கள் தங்களது குடும்ப உறுப்பினர்களும் இதேபோன்ற இழிதொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறியிருக்கின்றனர்.

## பாகுபாடுகளும் மீறல்களும்

இழிதொழில்களில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களில் 57 பேர் பிற சமூகத்தினர் தங்களை ஒதுக்கி வைத்திருப்பதாகவும், 176 பேர் பிற சமூகத்தினர் தங்களைக் கண்டு ஒதுங்கிப் போவதாகவும் கூறியுள்ளனர். இது மட்டுமல்லாமல் பேசுவதில் கட்டுப்பாடு காட்டுவதாக 50 பேரும், குடும்பத்தினரிடையே பாகுபாடு காட்டுவதாக 38 பேரும், தங்களது குழந்தைகளிடம் பாகுபாடு காட்டுவதாக 38 பேரும், சாதி ரீதியாக தங்களை இழிவாகப் பேசுகின்றனர் என்று 199 பேரும், கோவிலுக்குள் உள்ளே செல்ல முடியாமல் தவிப்பதாக 147 பேரும், பாலின ரீதியாக பாகுபாடு காட்டுவதாக 40 பேரும் எமது ஆய்வில் தெரிவித்துள்ளனர்.



## காயம், தாக்குதல் மற்றும் பாலியல் வன்புணர்ச்சி

தொழில் ரீதியாகவும், சாதி ரீதியாகவும் இத்தொழிலாளர்கள் மீது பல்வேறு விதமான சித்திரவதைகள் நடந்து வருவது கண்டறிய முடிகிறது. தொழில் ரீதியாக 245 தொழிலாளர்கள் காயமடைந்துள்ளனர். 41 தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடந்துள்ளது. ஒரு பெண் தொழிலாளர் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் 226 பேர் என்பது குறிப்பிடத்தக்கது.

அருவருக்கத்தக்க, இழிவான கழிவுகளிடையே பணி செய்வதனால் 288 தொழிலாளர்களுக்கு மனஉளைச்சல் ஏற்பட்டுள்ளது. இவற்றில் 220 தொழிலாளர்கள் தூக்கமின்மையால் அவதிப்பட்டு வருகின்றனர். 157 தொழிலாளர்கள் பயந்த நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். பாலியல் சீண்டலினால் 16 பெண் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## மது மற்றும் கந்துவட்டி கொடுமைகள்

303 தொழிலாளர்களில் 183 தொழிலாளர்களுக்கு மது அருந்தும் பழக்கமும், 115 தொழிலாளர்களுக்கு போதை உட்கொள்ளும் பழக்கமும் உள்ளது. இவர்களில் 204 பேர் கடன் வாங்கியுள்ளனர். இவற்றில் 108 பேர் கந்துவட்டி வாங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மது அருந்துவதற்கும், போதை பொருள் உட்கொள்வதற்கும் மாதத்திற்கு ரூ.2000த்திற்கு மேல் செலவு செய்கிற தொழிலாளர்கள் எண்ணிக்கை 17. இதுமட்டுமல்ல வருடத்திற்கு ரூ.50 ஆயிரத்திற்கு மேல் கடன் மற்றும் கந்துவட்டி வாங்கக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கை 31.

கந்துவட்டி முதலாளிகளால் 206 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றில் 52 தொழிலாளர்கள் தங்களது மனைவி மற்றும் உடன்பிறந்த சகோதரிகளை கந்துவட்டிக் காரர்கள் இழிவாகப் பேசியுள்ளனர் என்று கூறினார்கள்.125 தொழிலாளர்கள் கந்துவட்டிக்காரர்கள் தங்களை சாதி ரீதியாக இழிவாகப் பேசியுள்ளனர் என்ற பதிவு செய்தனர். கந்துவட்டிக் காரர்களால் காயமடைந்ததாக 4 தொழிலாளர்கள் கூறியிருக்கின்றனர். ஒரு தொழிலாளர் தான் கட்டிப்போடப்பட்டிருந்ததாக கூறியிருக்கிறார்.

எமது குழுவினர் ஆய்வு செய்த 303 தொழிலாளர்களில் தங்களுடன் பணிபுரிந்த போது 55 தொழிலாளர்கள் பணி விபத்தினால் இறந்துபோயுள்ளனர் என்கிற விபரத்தை பதிவு செய்துள்ளனர்.

## நோய்கள்

303 தொழிலாளர்களில் 271 தொழிலாளர்கள் தங்களுக்கு பணி ரீதியான நோய்கள் ஏற்பட்டிருப்பதாக எமது குழுவினரிடத்தில் தெரிவித்துள்ளனர். இவர்களில் காசநோயால் பாதிக்கப்பட்டோர் 58, ஆஸ்துமாவினால் பாதிக்கப்பட்டோர் 91, தோல் வியாதியால் பாதிக்கப்பட்டோர் 110, நுரையீரல் பாதிப்பினால் 99 பேரும், இதய கோளாறினால் 29 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பணி பாதுகாப்பு சம்பந்தமாக தகுந்த கருவிகளோ, உடைகளோ, பாதுகாப்பு கவசங்களோ கொடுக்கவில்லை என்று 257 தொழிலாளர்கள் கூறியுள்ளனர்.

தாங்கள் இதுபோன்ற அருவருக்கத்தக்க இழிவான தொழிலில் ஈடுபடுவதற்கு சாதி முக்கிய காரணம் என்று 255 தொழிலாளர்கள் கூறியுள்ளனர். வறுமையும் காரணம் என்று 280 தொழிலாளர்களும், சாதி இந்துக்களின் கட்டாயப்படுத்துதல் போக்கினால் 94 தொழிலாளர்களும், முதலாளிகளின் கட்டாயப் படுத்துதல் போக்கினால் 37 தொழிலாளர்களும், கல்வியின்மையால் 266 தொழிலாளர்களும், வேலையின்மையால் 169 தொழிலாளர்களும் இப்பணியில் ஈடுபட்டிருப்பதாக எமது குழுவினரிடம் தெரிவித்தனர்.

## ஆய்வின் முடிவுகள்

இந்திய அரசியல் சாசனம் பிரிவு 24-ல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்தக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில்களில் ஆபத்தான, ஆபத்தற்ற தொழில்கள் என்று பிரிக்கப்பட்டுள்ளது இதன் மூலம் அறிய வருகிறது. அதேபோன்று இந்திய அரசியல் சாசனம் பிரிவு 23ல் கட்டாயப்படுத்தி ஒருவரை வேலையில் ஈடுபடுத்தக்கூடாது கொத்தடிமையாக நடத்தக்கூடாது என்றும் வரையறுக்கப் பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இரண்டு அரசியல் சாசன பிரிவுகளுக்குட்பட்ட தொழில்களில் இழிதொழில்களும் பொருந்துமா? இல்லையா? என்பது குறித்து தெளிவான விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை.



இழிதொழில்கள் என்பது மனிதாபிமானமற்ற அனைத்து விதமான அருவருக்கத்தக்க நிலைகளை அனுபவித்து சகித்துக் கொண்டு செய்யக்கூடிய பணியாகும். இதுபோன்ற தொழில்களில் தலித்துகள் மட்டுமே ஈடுபட்டு வருகின்றனர். இது அப்பட்டமான "தொழில் தீண்டாமை". ஆனால் தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது. தீண்டாமையை கடைபிடிப்பது குற்றம் என்று அரசியல் சாசனம் பிரிவு 17-ல் கூறப்பட்டு வந்தாலும், தொழிலின் அடிப் படையில் காட்டப்படுகிற தீண்டாமை சித்திரவதைகளை பிரிவு 17-ல் பொருத்திப் பார்க்க முடியாத அவலநிலை இருந்து வருகிறது.

இதுபோன்ற தொழில்களில் யாரும் கட்டாயப்படுத்தவில்லை. தலித்துகளே விரும்பித்தான் இத்தொழில்களை செய்கின்றார்கள் என்கிற கருத்தும் பரப்புரை செய்யப்பட்டு வருகிறது. கட்டாயம் என்பது நேரடியாக ஒருவர் மற்றொருவரை கட்டாயப் படுத்தி ஒரு வேலையில் ஈடுபடுத்துவது மட்டுமல்ல. சமூகம், சாதி, தீண்டாமை உள்ளிட்ட அவல நிலைகள் ஒரு மனிதனை கட்டாயப்படுத்தி ஒரு வேலையில் தள்ளுகிறது என்று சொன்னால் அதுதான் சமூக கட்டாய சூழலாகும். இந்த அடிப்படை உண்மையை தெரியாதவர்கள் அல்லது தெரிந்தும் தெரியாதது போன்று இருப்பவர்களால் முன்வைக்கப்படுவது கொடுமையிலும் கொடுமை.

தொழில்கள் நவீனமாயமாக்கப்பட்டு வருகின்றன. தொழில்களில் பாதுகாப்புச் சாதனங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதெல்லாம் தொழிலாளர்கள் உரிமைகளில் முன்வைக்கப் படுகின்ற கருத்துக்கள். ஆனால் எவ்வித நவீனமும் ஆக்கப் படாமல், பாதுகாப்புக் கருவிகளும் கொடுக்கப்படாமல் வாழ்க்கையைப் பணயம் வைக்கின்ற நிலையில் தான் இழிதொழில்களில் ஈடுபடுகிற தொழிலாளர்கள் உள்ளனர். மெல்ல மெல்ல இறந்து கொண்டிருக்கிறார்கள் இத்தொழிலாளர்கள்.

அருவருக்கத்தக்க சகித்துக் கொள்ளமுடியாத தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள் என்னவிதமான மீறல்களாலும் அவமானங்களாலும் புறக்கணிப்புகளாலும் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்பதை எமது ஆய்வறிக்கையில் தெள்ளத் தெளிவாக கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படை காரணம் சாதி, தீண்டாமை பாகுபாடு என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே தலித்துகள் ஈடுபடுகிற இழிதொழில் மீறல்களை ஒழிக்க வேண்டிய நடவடிக்கைகளில் அரசு அதிதீவிரமாக போர்க்கால

நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். இல்லையென்று சொன்னால் ஒரு சமூகம், ஒரு இனம் அழிந்து கொண்டிருப்பதை நாம் கண்ணால் பார்த்துக் கொண்டேயிருக்கக்கூடிய பார்வையாளர்களாகவே இருந்து மடிவோம் என்பதும் சிவில் சமூகம் சார்பாக அரசை நாங்கள் கவனப்படுத்த விரும்புகிறோம்.

## பரிந்துரைகள்

✦ பிணவறையில் பணி, மலம் அள்ளுதல், சாக்கடையைச் சுத்தப்படுத்துதல், இறந்த கால்நடைகளை அப்புறப்படுத்துதல், கழிவுகளை அகற்றுதல் உள்ளிட்ட இழிதொழில்களில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் குறித்து தமிழக அரசு விரிவான ஆய்வினை மாநில அளவில் நடத்த வேண்டும். அவ்வாய்வில் கண்டறியப்பட்ட உண்மைகளை அவலங்களை வெள்ளையறிக்கையாக வெளியிட வேண்டும்.

✦ பல்வேறு அவலங்களில் ஈடுபடுகிற தலித் தொழிலாளர்களை இத்தொழிலில் இருந்து மீட்டெடுத்து அவர்களுக்கு உரிய பாதுகாப்பு மிகுந்த அரசு பணியினை வழங்க அரசு உத்தரவிட வேண்டும். படிப்பு, அனுபவம் அடிப்படையில் வெவ்வேறு துறைகளில் இத்தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். இது குறித்து தமிழக அரசு அனைத்துத் துறைகளையும் அழைத்து கூட்டம் நடத்தி அந்தந்தத் துறைகளில் இருக்கக்கூடிய காலியிடங்களை கணக்கிட்டு அவற்றில் இத்தொழிலாளர்களை பணியில் அமர்த்துவது குறித்து விரிவான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

✦ இதுபோன்ற இழிதொழில்களில் பல்வேறு அவலங்களையும் மீறல்களையும் சகித்துக் கொண்டு வாழ்ந்து வருகிற தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.5 இலட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டும்.

✦ இழிதொழில்களில் ஈடுபடுகிற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தரமான கட்டாய பாதுகாப்பான நீடித்த நிலைத்த கல்வியினை வழங்குவதற்கு அரசு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். இழிதொழில் தலைமுறை என்பது இதுவே இறுதியாக இருக்கிற பட்சத்தில் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.



✦ இழிதொழில்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் மீது வன்முறையில் ஈடுபடுகின்ற ஆதிக்க, கந்துவட்டி சக்திகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு உத்தரவிட வேண்டும்.

✦ தொழில் ரீதியாக நோய்வாய்ப்பட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு தொடர் மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கு அரசு சிறப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டும். இதனைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

✦ கந்துவட்டியால் அவதிப்படுகின்ற தொழிலாளர்களை கணக்கெடுத்து உடனடியாக அக்கந்துவட்டி அனைத்தும் இரத்து செய்வதற்கு அரசு உத்தரவிட வேண்டும். கந்துவட்டி கொடுத்த அக்கும்பல் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிட வேண்டும்.

✦ தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989ல் இழிதொழில்களில் ஈடுபடுகிற தொழிலாளர்கள் மீதான பாகுபாடுகள், வன்கொடுமைகள் சம்பந்தமாக குற்றவாளிகளுக்கு தண்டனை, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து புதிய பிரிவினைச் சேர்க்க வேண்டும்.

✦ விஷவாயு தாக்கியோ அல்லது மலத்தொட்டியில் இறங்கி வேலை செய்கின்ற போதோ அல்லது பிற இழிதொழில்களில் பணி செய்கின்ற போதோ இறந்து போகிற தொழிலாளர்களுக்கு ரூ.10 இலட்சம் நிவாரணம் வழங்க அரசு உத்தரவிட வேண்டும்.

# தீண்டாமை, ஆண் ஆதிக்கத்தைச் சேர்ந்து சுமக்கும் தலித் பெண்கள்

## ஆய்வு எல்லைகளும் முறைகளும்

மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய மூன்று மாவட்டங் களில் இவ்வாய்வு நடத்தப்பட்டுள்ளது. நான்கு பாகங்களைக் கொண்ட 54 கேள்விகளை உள்ளடக்கிய படிவத்தின் மூலமாக எமது எவிடன்ஸ் அமைப்பின் குழுவினர் 6 குழுக்களாக சென்று இவ்வாய்வினை நடத்தியுள்ளனர். எமது களஆய்வில் கண்டறியப் பட்ட 115 தலித் பெண்கள் தங்கள் மீது நடந்த சித்திரவதைகள், பாலியல் பலாத் காரங்கள், சாதிய ரீதியான பாகுபாடுகள் உள்ளிட்ட மீறல்களை பதிவு செய்தது மட்டுமல்லாமல் ஆய்வுப் படிவத்தில் கையொப்பம் போட்டும் கொடுத்துள்ளனர். வன்முறையால் இறந்துபோன அல்லது 18 வயதிற்குட்பட்ட பாதிக்கப்பட்ட பெண்களின் சார்பாக அவரது குடும்பத்தினர் கையொப்பம் போட்டுக் கொடுத்துள்ளனர். சில பெண்கள் தங்களுடைய பெயர்களை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளனர். சில பெண்கள் தங்கள் மீது நடந்த வன்முறைகளுக்கு எதிராக என்ன மாதிரியான சட்ட நடவடிக்கை களை எடுக்கலாம் என்று ஆலோசனை கேட்டது மட்டுமல்லாமல் அதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட விருப்பம் தெரிவித்துள்ளனர். சட்ட நடவடிக்கைகளுக்கு தயாராக உள்ள பெண்களின் பெயர்களை, விபரங்களை மட்டும் எமது அமைப்பு வெளியிட தயாராக உள்ளது. மற்ற பெண்களின் விபரத்தை வெளியிட முடியாது.



## ஆய்வில் கண்டறிந்தவைகள்

எமது ஆய்வில் கண்டறியப்பட்ட 115 தலித் பெண்களில் 64 பறையர்கள், 11 பள்ளர்கள், 18 அருந்ததியர்கள், 12 புலையர்கள், 8 குறவர்கள் உள்ளனர். இரண்டு பெண்களின் சாதி கண்டறிய முடியவில்லை. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டோரின் வயது 18லிருந்து 80 என்பது குறிப்பிடத்தக்கது. இது மட்டுமல்லாமல் தமிழகத்தில் கடந்த 2008 மற்றும் 2009 வருடங்களில் நடந்த சில கொடூரமான தலித் மற்றும் பழங்குடியின பெண்கள் மீது நடத்தப்பட்ட வன்முறை சம்பவங்களின் விபரத்தை இவ்வாய் வறிக்கையோடு பதிவு செய்துள்ளோம். ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 115 பெண்களில் 96 பேர் கூலி தொழிலில் ஈடுபட் டுள்ளனர். இரண்டு பேர் தனியார் துறையிலும், 2 பேர் அரசுத் துறையிலும், மற்றவர்கள் பிற வேலைகளிலும் ஈடுபட்டு வருகின் றனர். 115 தலித் பெண்களில் விதவைகள் 17, கணவரால் கைவிடப் பட்டோர் 23, விவாகரத்துப் பெற்றோர் 3, தனித்து வாழ்பவர் 12, திருமணமானவர் 58.

## மீறல்களும் சித்திரவதைகளும்

ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 115 தலித் பெண்களும் தங்கள் மீது வன்முறைகள் நடந்துள்ளன என்பதை ஒப்புக் கொண் டுள்ளனர். இவற்றில் சாதி ரீதியாக இழிவாகப் பேசப்பட்டு பாதிக் கப்பட்டோர் 85 (74 சதவீதம்), பாலியல் ரீதியாக ஆபாசமாக பேசப்பட்டு பாதிக்கப்பட்டோர் 53 (46 சதவீதம்), பாலியல் சீண்டலுக்கு உள்ளாக்கப்பட்டோர் 23 (20 சதவீதம்), சாதி மற்றும் பாலியல் ரீதியான கிண்டலுக்கு உள்ளாக்கப்பட்டோர் 30 (26 சதவீதம்), தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டோர் 41 (36 சதவீதம்). மிரட்டலால் 63 (55 சதவீதம்) தலித் பெண்கள் பாதிக்கப் பட்டுள்ளனர். பாலியல் பலாத்காரத்திற்கு 10 (9 சதவீதம்) தலித் பெண்கள் உள்ளாக்கப்பட்டுள்ளனர். பாலியல் வன்புணர்ச்சி முயற்சியால் பாதிக்கப்பட்டோர் 6 (5 சதவீதம்) தலித் பெண்கள். பாலியல் வன்புணர்ச்சியால் பாதிக்கப்பட்டோர் 9 (8 சதவீதம்) தலித் பெண்கள். தீண்டாமை வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 51 (44 சதவீதம்). ஆபாச செய்கைகளால் 14 (12 சதவீதம்) தலித் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வன்முறையால் 5 (4 சதவீதம்) தலித் பெண்கள் தற்கொலை முயற்சிக்கு முயன்றுள்ளனர். இரண்டு பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஒரு பெண் கொலை செய்யப்பட்டுள்ளார்.

115 தலித் பெண்களில் 49 பெண்கள் தங்கள் மீது ஒரே தடவை வன்முறை நடந்துள்ளது என்று கூறியுள்ளனர். 32 பெண்கள் பல தடவைகள் வன்முறை நடந்துள்ளது என்று பதிவு செய்துள்ளனர். தொடர்ச்சியாக தங்கள் மீது வன்முறை நடந்து வருகின்றன என்று 19 தலித் பெண்கள் கூறியுள்ளனர்.

## வன்முறையில் ஈடுபட்டோர்

115 தலித் பெண்களில் 67 தலித் பெண்கள் ஒரு சில சாதி இந்துக்கள் தான் தங்கள் மீது வன்முறையில் ஈடுபடுகின்றனர் என்று கூறியுள்ளர். 28 தலித் பெண்கள் தங்கள் மீது பல சாதி இந்துக்கள் வன்முறையில் ஈடுபடுகின்றனர் என்று கூறினார்கள். இவற்றில் 22 பெண்கள் தங்கள் மீது வன்முறையில் ஈடுபட்டோர் 10க்கும் மேற்பட்ட வன்கொடுமை கும்பல் என்று பதிவு செய்துள்ளனர்.

115 தலித் பெண்களில் 79 தலித் பெண்கள் தங்கள் மீது நடந்த முதல் வன்கொடுமை சம்பவத்தை நினைவில் வைத்துள்ளனர். இதுமட்டுமல்ல 115 பேரில் 63 பெண்கள் தங்கள் மீது நடந்த வன்முறை சம்பவத்தை தங்களது குடும்பத்தினரிடம் கூட தெரிவிக்கவில்லை என்பதை பதிவு செய்துள்ளனர்.

115 தலித் பெண்களில் 43 பேர் தங்களுடைய வீடுகளில் தான் இவ்வன்முறை நடந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர். சாதி இந்துக்களின் குடியிருப்புகளில் வன்முறை நடந்தது என்று 17 பெண்கள் கூறியுள்ளனர். பணித் தளங்களில் வன்முறை நடந்தது என்று பதிவு செய்திருப்பவர்கள் 15 பேர். வழிபாட்டுத் தலங்களில் வன்முறைக்கு உள்ளானோர் 20 பெண்கள். பொது இடத்தில் வன்முறைக்கு உள்ளான தலித் பெண்கள் 58 பேர். சாதி இந்துக்களுக்கு சொந்தமான இடத்தில் வன்முறைக்கு உள்ளானோர் 23 பேர். அரசு நிறுவன அமைவிடத்தில் பாதிக்கப்பட்டோர் 5 பேர்.

115 வன்முறை சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளில் சாதி இயக்கங்களில் உள்ளோர் 12 பேர் என்றும், அரசியல் பின்னணியில் உள்ளோர் 8 பேர் என்றும், பணபலம் உள்ளோர் 49 பேர், அரசு பதவியில் உள்ளோர் 5 பேர், பதவியில் உள்ளோர் 6 பேர், கிராம அந்தஸ்த்தில் உள்ளோர் 14 பேர், முதலாளிகள் 21 பேர் என்று பாதிக்கப்பட்ட பெண்கள் பதிவு செய்துள்ளனர்.



பாதிக்கப்பட்ட 115 தலித் பெண்களில் 34 பெண்கள் மட்டுமே காவல்நிலையத்தில் தங்களுக்கு நடந்த வன்முறை சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளனர். இவற்றில் 21 வழக்குகளுக்கு மட்டுமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 115 வன்முறை சம்பவங்களில் 16 (14 சதவீதம்) சம்பவங்களில் மட்டும் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர் என்று பதிவு செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட 115 பெண்களில் 7 (6 சதவீதம்) பெண்களுக்கு மட்டும் நிவாரணம் கிடைத்துள்ளது.

பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் ஒரு வழக்கில் மட்டும் குற்றவாளிக்கு தண்டனை கிடைத்துள்ளது. 6 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. 11 வழக்குகளில் நீதிமன்ற நிலுவையில் உள்ளது. 15 வழக்குகள் விசாரணை நிலுவையில் உள்ளது.

சாதி இந்துக்களின் மிரட்டலால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று 54 தலித் பெண்கள் கூறியுள்ளனர். போலீசாரின் மிரட்டலுக்கு பயந்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று 29 பெண்கள் கூறினார்கள். சாதி இந்துக்களின் தாக்குதலுக்கு பயந்து நடவடிக்கை எடுக்காத பெண்களின் எண்ணிக்கை 27. போலீசார் மீதான அச்சத்தின் காரணமாகவே சட்ட நடவடிக்கை எடுக்கப் பயந்த பெண்களின் எண்ணிக்கை 32.

வன்கொடுமையால் மன உளைச்சல், பயம், தற்கொலை முயற்சி செய்தல் உள்ளிட்ட பல்வேறு மனரீதியான பாதிப்புகளுக்கும், உடல் ரீதியான தாக்குதலுக்கும் பாதிக்கப்பட்ட தலித் பெண்கள் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

## பாதிக்கப்பட்ட சில பெண்களின் வாக்குமூலங்கள் விபரம்

### 1. பழங்குடியின பெண்கள் கடத்தப்பட்டு பாலியல் வன்புணர்ச்சி

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அருகில் உள்ள கிராமம் மூங்கில்பள்ளம். இக்கிராமத்தில் வசித்து வருகிற பழங்குடியின பளியர் சமூகத்தைச் சேர்ந்த திரு.திருமல் என்பவருடைய மகள்களான காளியம்மாள் (24), பஞ்சு (14) ஆகிய இருவரும் கடந்த 13.04.2008 அன்று சாதி இந்து வன்கொடுமை கும்பலால் கடத்தப்பட்டு பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டனர். இவ்வன்முறைக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க

முயற்சி செய்த திரு.திருமல் கடுமையாக சாதி இந்து வன்கொடுமை கும்பலால் மிரட்டப்பட்டார். பின்னர் எவிடன்ஸ் அமைப்பின் தலையீட்டினால் கடந்த 28.05.2008 அன்று கொடைக்கானல் காவல்நிலையத்தில் குற்றஎண்.167/2008 பிரிவுகள் 366, 376 இ.த.ச. மற்றும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(2)(5) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றவாளிகள் இருவரும் கைது செய்யப் பட்டனர். பாதிக்கப்பட்ட காளியம்மாள் அவர்களுக்கு மட்டும் தற்போது ரூ.50,000 ஆரம்ப கட்ட நிவாரணம் கிடைத்துள்ளது.

### 2.தலித் பெண்ணை தாக்கி பாலியல் வன்புணர்ச்சி முயற்சி

நாகப்பட்டிணம் மாவட்டம், வேதாரண்யம் அருகில் உள்ள ஆயக்காரன்புலம் பகுதியைச் சேர்ந்தவர் திருமிகு.மாரி முத்து (35) க/பெ.கலியமூர்த்தி. இவருடைய வீட்டிற்கு கடந்த 17.05.2008 அன்று இரவு 11.00 மணியளவில் 2 சாதி இந்து இளைஞர்கள் உள்ளே புகுந்து பாலியல் வன்புணர்ச்சிக்கு முயற்சி செய்துள் ளனர். அப்பெண், நான் உங்கள் அம்மா வயது என்னை விட்டு விடுங்கள் என்று கெஞ்சி கதறியும், அவ்வன்கொடுமை கும்பல் அப் பெண்ணை கொடூரமாக அடித்து சித்திரவதை செய்து காயப் படுத்தியுள்ளனர். இச்சம்பவம் குறித்து வாய்மேடு காவல் நிலையத்தில் 25.05.2008 அன்று குற்றஎண்.146/2008 பிரிவுகள் 294, 351, 506(2) மற்றும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(10) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

### 3. நியாய விலைக் கடையில் சாதி இந்துக்களோடு வரிசையில் நின்றதற்காக தலித் பெண் மீது தாக்குதல்

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி அருகில் உள்ள கிராமம் தச்சூர். இக்கிராமத்தில் வசித்து வருகிற தலித் பெண் திருமிகு.காசியம்மாள் (23) க/பெ.துரைமுருகன் கடந்த 24.09.2009 அன்று தச்சூர் நியாய விலைக் கடைக்கு சென்றுள்ளார். அங்கு வரிசையில் நின்றிருந்த திருமிகு. காசியம்மாளின் கை பட்டதற்காக சாதி இந்துக்களான திருமிகு.விருத்தாம்பாள், திருமிகு.இந்துமதி, திருமிகு.கிருஷ்ணவேணி ஆகியோர் ஆத்திரமடைந்து காசியம் மாள் மீது கொடூர தாக்குதல் நடத்தியுள்ளனர்; சாதிய ரீதியாக இழிவாகவும் பேசியுள்ளனர். அவரது முகத்திலும் நெஞ்சிலும்



செருப்பால் அடித்தது மட்டுமல்லாமல் திருமிகு.விருத்தாம்பாளின் கணவர் திரு.சீனிவாசன் என்பவர் அப்பெண்ணின் சேலையை உருவி மானபங்கப்படுத்தி தென்னை மட்டையால் கடுமையாக தாக்கியுள்ளார். இச்சம்பவம் குறித்து கள்ளக்குறிச்சி காவல்நிலைய குற்றஎண்.669/2009 பிரிவுகள் 294, 323, 354 இ.த.ச. மற்றும் தாழ்த்தப் பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(10), 3(1)(11) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது. குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

### 4. பதிமூன்று வயது பழங்குடியின பெண் பாலியல் வன்புணர்ச்சி

கடலூர் மாவட்டம், சின்னவடவாடி கிராமத்தைச் சேர்ந்தவர் திருமிகு.அஞ்சலை. இவருடைய 13 வயது மகள் தேவி கடந்த 15.06.2008 அன்று 2 சாதி இந்துக்களால் கடத்தப்பட்டு பாலியல் வன்புணர்ச்சி செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து மங்கலம்பேட்டை காவல்நிலைய குற்றஎண்.77/2008 பிரிவுகள் 376, 366 இ.த.ச. மற்றும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(12), 3(2)(5) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றவாளி கைது செய்யப்பட்டனர்.

### 5. மனநலம் பாதிக்கப்பட்ட தலித் பெண் பாலியல் வன்புணர்ச்சி

மதுரை, திருமங்கலம் பகுதியைச் சேர்ந்தவர் திருமிகு. மல்லிகா (22) த/பெ.அழகர்சாமி. மனநலம் பாதிக்கப்பட்டிருந்த இவரை சாதி இந்துவான திருமிகு.நாராயணன் என்பவர் கடந்த 10.10.2009 அன்று பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளார். இச்சம்பவம் குறித்து திருமங்கலம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் குற்றஎண்.8/2009 பிரிவுகள் 376 இ.த.ச. மற்றும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(12) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது. குற்றவாளி கைது செய்யப்படவில்லை.

### 6. வயதான தலித் பெண் மானபங்கம்

தேனி, பெரியகுளம் அருகில் உள்ள பொம்மிநாயக்கன் பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் திருமிகு.முனியம்மாள் (48) க/பெ.கருப்பையா. தாழ்த்தப்பட்ட தலித் பெண்ணான முனியம் மாள் அவர்களை கடந்த 15.04.2009 அன்று ஜஹாங்கீர் (23) என்கிற

இளைஞர் வழிமறித்து அவரது ஆடைகளை கிழித்து பாலியல் வன்புணர்ச்சிக்கு முயற்சி செய்துள்ளார். இவ்வன்முறையில் தப்பிப்பதற்கு முயற்சித்த முனியம்மாள் மீது கொடூரமான தாக்குதல் நடத்தப்பட்டது. இச்சம்பவம் குறித்து ஜெயமங்கலம் காவல்நிலையத்தில் குற்றஎண்.54/2009 பிரிவுகள் 341, 354, 323 இ.த.ச. மற்றும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(11) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றவாளி கைது செய்யப்பட்டார்.

மேற்குறிப்பிட்ட சம்பவங்களிலும் எமது எவிடன்ஸ் அமைப்பு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு சட்ட ரீதியான தலையீட்டினை செய்து வருகிறது. இதுபோன்ற பல சம்பவங்கள் தமிழகத்தில் தொடர்ந்து நடந்து வருகின்றன. சில உதாரணங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. தலித் பெண்கள் மீதான மீறல்கள் குறித்து எங்களது ஆய்வில் பாதிக்கப்பட்ட 115 பெண்கள் தைரியமாக கையொப்பமிட்டு வாக்குமூலம் கொடுத்திருப்பது முக்கிய ஆதாரமாக எமது அமைப்பு கருதுகிறது.

இப்பெண்கள் மீது நடத்தப்படுகிற பெரும்பாலான தாக்குதல்கள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்வது கிடையாது. ஏன் பாதிக்கப்பட்ட பெண்கள் காவல்நிலையத்திற்கு வருவதற்கு முன்பே பல்வேறு சாதி இந்து வன்கொடுமை கும்பலால் மிரட்டப்படுகிற போக்கும் நடந்து வருகிறது. நாங்கள் சில கிராமங்களில் மட்டும் 115 பெண்களை சந்திக்க முடிந்ததே தவிர, இதுபோன்ற பல வன்முறைகள் தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆறு ஒன்றியங்களில் சில கிராமங்களில் மட்டுமே இவ்வளவு வன்முறைகளை கண்டறிய முடிகிறது. இதே போன்று தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் கடந்த 2008 மற்றும் 2009ல் நடந்த தலித் பெண்கள் மீதான வன்முறைகளை கணக்கிட்டுப் பார்த்தால் குறைந்த பட்சம் 50,000 வன்முறை சம்பவங்களாவது நடந்திருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

115 சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளில் ஒரு சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிக்கு மட்டுமே தண்டனை கிடைத்திருக்கிறது. சில சம்பவங்கள் வழக்கு நிலுவையில் இருந்தாலும் அவை முறையான அளவில் விசாரிக்கப்பட்டு, தண்டனை கிடைக்குமா என்பது கேள்விக்குறியாகத்தான் உள்ளது. "நேசனல் ரெக்கார்ட்ஸ் க்ரைம் ஃபீரோ" வெளியிட்டுள்ள 2007ம் ஆண்டு அறிக்கையில்



தலித் பெண்கள் மீதான நிலுவையில் உள்ள தற்போதைய வழக்குகள் 4,518. இவற்றில் 321 வழக்குகளுக்கு மட்டுமே தண்டனை கிடைத்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் கடந்த 2004ல் தலித் பெண்கள் மீது 1157 பாலியல் வன்புணர்ச்சி சம்பவங்கள் நடந்துள்ளன. 2005-ல் 1172, 2006-ல் 1217, 2007-ல் 1349 சம்பவங்கள் நடந்துள்ளன. தலித் பெண்கள் மீதான பாலியல் வன்புணர்ச்சி வன்முறையின் முதலாவது இடத்தில் மத்தியப் பிரதேசமும், இரண்டாவது இடத்தில் உத்தரபிரதேசமும், மூன்றாவது இடத்தில் ராஜஸ்தானும், நான்காவது இடத்தில் ஆந்திர பிரதேசமும் உள்ளது.

இதெல்லாம் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விபரம். பதிவு செய்யப்படாத வழக்குகளின் எண்ணிக்கையை கண்டு பிடிப்பதற்கு நம்மிடையே எவ்விதமான ஆய்வுகள் இல்லை என்பதுதான் உண்மை. நடக்கின்ற வன்முறைகளில் 5 சதவீதம் கூட பதிவு செய்வது கிடையாது. அதுவும் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 95 சதவீத வழக்குகள் தள்ளுபடி ஆகிறது என்பது கொடுமையிலும் கொடுமை. பாலியல் வன்புணர்ச்சி மட்டுமல்ல மற்ற தாக்குதல், சித்திரவதைகள், கடத்தல் உள்ளிட்ட வன்கொடுமைகளிலும் பாதிக்கப்பட்ட தலித் பெண்களுக்கு உரிய நீதி கிடைப்பது கிடையாது.

தலித் பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் பெரும்பாலும் வழக்காக பதிவு செய்யாமல் இருப்பதற்கு பாதிக்கப்பட்ட தலித்துகள் பயத்துடன் உள்ளனர் என்கிற காரணமும் கூறப்படுகிறது. இந்த காரணத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. சாதி இந்துக்களின் ஆதிக்கம், சாதி இந்துக்களை சார்ந்திருக்கக்கூடிய பொருளாதார பின்னணி, இத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்து வருகிற தலித்துகள் எப்படி துணிச்சலாக வழக்கினை எதிர் கொள்ள முடியும். தைரியத்துடன் வழக்கு பதிவு செய்கிற தலித் பெண்கள் விசாரணையின் போது பல்வேறு அலைக்கழிப்புகளுக்கும் மிரட்டல்களுக்கும் உள்ளாக்கப்படும் போது, நடந்த வன்கொடுமையை சகித்துக் கொண்டே இருந்து விடலாம் என்கிற மனநிலையில் தான் உள்ளனர். இவற்றை மாற்ற வேண்டிய பொறுப்பு அரசிடத்தில் உள்ளது.

தலித் பெண்கள் மீது நடத்தப்படக்கூடிய வன்கொடுமைகள் என்பது தீண்டாமையின் அடிப்படையிலும், சாதியத்தின்

அடிப்படையிலும் கட்டமைக்கப்பட்டுள்ளது. எந்தக் கலவரமாக இருந்தாலும், எந்த மோதலாக இருந்தாலும் முதலில் வன் கொடுமை கும்பலுக்கு பலியாவது தலித் பெண்களாகத்தான் உள்ளனர். ஆகவே தலித் பெண்கள் மீதான வன்முறையை, சித்திரவதையை தடுப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்பதை சிவில் சமூகம் சார்பாக அரசிற்கு நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## பரிந்துரைகள்

✦ தலித் பெண்கள் மீதான வன்கொடுமைக்கு எதிராக தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(11), 3(1)(12) மற்றும் 3(2)(5) ஆகிய பிரிவுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன. இப்பிரிவுகளின் கீழ் அரசு வழக்கு பதிவு செய்ய தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✦ தலித் பெண்கள் மீதான வன்முறை சம்பவங்களில் பாதிக்கப்பட்டோர் புகார் கொடுக்க வேண்டும் என்பதை முக்கிய விதியாக கொள்ளாமல் மாவட்ட காவல்துறை தாமாகவே முன் வந்து அப்புகாரினை விசாரித்து பதிவு செய்கிற நடவடிக்கை யினை அரசு உத்தரவாக வெளியிட வேண்டும்.

✦ தலித் பெண்கள் மீது நடத்தப்படுகிற வன்கொடுமைக்கு எதிராக சட்ட தலையீட்டினை தடுக்கின்ற சக்திகள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தில் வழக்கு பதிவு செய்ய அரசு உத்தரவிட வேண்டும்.

✦ பாலியல் வன்புணர்ச்சியால் பாதிக்கப்படுகிற தலித் பெண்களுக்கு குறைந்த பட்சம் நிவாரணம் ரூ.5 இலட்சம், மற்ற வன்முறைக்கு இழப்பீடு மற்றும் நிவாரணம் ரூ.2 இலட்சம் என்பதை தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989-ல் கொண்டு வரப்பட வேண்டும்.

✦ தலித் பெண்கள் மீதான வன்முறையை கண்காணிப் பதற்கு மாவட்டம் தோறும், மனித உரிமை ஆர்வலர்கள், பத்திரிக்கையாளர்கள், பெண்ணியவாதிகள், வழக்கறிஞர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்களை அரசு உருவாக்க வேண்டும்.

✦ தலித் பெண்கள் மீதான வன்முறை சம்பவங்களில் விசாரணை அதிகாரியாக எஸ்.பி. அந்தஸ்த்தில் உள்ள பெண்



அதிகாரியை நியமிக்க அந்தந்த மாவட்டங்களில் அரசு உத்தரவிட வேண்டும். குற்றவாளிகள் மீது தகுந்த ஆதாரங்களை திரட்டுவது, சாட்சிகளை கண்டறிவது உள்ளிட்ட திறன் வாய்ந்த, புலனாய்வு வகுப்புகள் போலீசாருக்கு தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். இது மட்டுமல்லாமல் சமத்துவம், தீண்டாமை ஒழிப்பு உள்ளிட்ட மனித உரிமை கல்வி சார்ந்த பயிற்சிகள் காவல்துறையிலும் நிர்வாகத் துறையிலும் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

✦ பாதிக்கப்பட்ட தலித் பெண்கள் புகார் கொடுக்க வருகின்ற போது, புகாரை பதிவு செய்ய மறுக்கின்ற போலீசார் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 4 பயன்படுத்த அரசு உத்தரவாகவே வெளியிட வேண்டும்.

✦ தலித் பெண் வழக்கறிஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர் களைக் கொண்ட குறைதீர்க்கும் தாலுகா குழுக்களை அரசு உருவாக்க வேண்டும். தலித் பெண்கள் மீதான வன்முறைகளை முறையாக பதிவு செய்யாத, முறையாக விசாரணை செய்யாத அதிகாரிகள் சம்பந்தமான புகார்களை இக்குழுக்களிடம் கொடுக் கலாம். அல்லது இக்குழுக்களிடமே புகாரினைக் கொடுத்து அவற்றை முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்கிற நிலையினை உருவாக்குகிற திட்டத்தை அரசு ஏற்படுத்தினால் பயனுள்ளதாக இருக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

✦ கிராம அளவில், பஞ்சாயத்து அளவில் விடப்படுகிற குத்தகைகள் மற்றும் வேலை வாய்ப்புகளில் அதிகளவு தலித் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய ஆதிதிராவிடர் நலத்துறையும், உள்ளாட்சித்துறையும் இணைந்து சமூக, சமத்துவ அதிகார திட்டங்களை உருவாக்க வேண்டும்.

✦ ஒவ்வொரு பள்ளிகளிலும் தீண்டாமை ஒழிப்பு, பெண் சமத்துவம் குறித்து தனி பாடம் கொண்டு வரப்பட வேண்டும். இப்பாடம் கட்டாயமாக்கப்பட வேண்டும். மதிப்பீடுள்ள பாட மாக அங்கீகரிக்க வேண்டும்.

# வழிபாட்டுத்தலங்களில் பாகுபாடுகள்

வழிபாட்டுத்தலங்களில் காட்டப்படுகிற பாகுபாட்டினால் சாதிய மோதல்களும், கலவரங்களும், படுகொலைகளும் தமிழகத்தில் அதிகரித்து வருகின்றன. தலித்துகளுக்கு வடம் பிடிக்க அனுமதி மறுப்பு. சம உரிமை கேட்டதினால் இரண்டு தலித்துகள் படுகொலை கோவில் தேரினை தலித்துகள் தொட்ட தினால் கொடூர தாக்குதல்கள் எட்டு பேர் படுகாயம். திருவிழா விற்கு வந்த தலித் பெண்கள் ஆடைகள் கிழிக்கப்பட்டு மான பங்கம். தேர் தலித் குடியிருப்பிற்குள் வரவில்லை. இதனால் இரண்டு தரப்பினர் மோதல், வீடுகள் நொறுக்கப்பட்டன. பள்ளி சான்றிதழ்கள் எரிக்கப்பட்டன. பொருட்கள் சூறையாடப்பட்டன என்கிற செய்திகள் தினசரி வாழ்க்கையில் அங்கமாகிப்போன நிகழ்வுகளாக பதிவு செய்யப்படுகின்றன.

உத்தபுரம் தீண்டாமை சுவர் பிரச்சனைக்கும் கோவில்தான் காரணம். கண்டதேவி தேர் வடம் பிரச்சனைக்கும் கோவில் தான் காரணம். கீரிப்பட்டி, பாப்பாபட்டி தேர்தல் பாகுபாடுகளுக்கும் கோவில்தான் காரணம் என்று சில உதாரணங்களும் சொல்லப் படுகின்றன. கோவில் காரணமா? கடவுள் காரணமா? இது குறித் தெல்லாம் ஆராய்வதை விட கடவுளின் பெயரால் கோவிலின் பெயரால் நடத்தப்படுகிற சாதிய மோதல்களின் இழப்புகளும் அவமானங்களும் தாங்கிக் கொள்ள முடியாத சமூக அவலமாக இருக்கிறது என்பதுதான் உண்மை. இந்தப் பிரச்சனை நேற்று, இன்று ஏற்பட்ட பிரச்சனையா? கோவில் நுழைவுப் போராட்டம் ஆண்டாண்டு காலமாக நடந்து வருகிறது. தலித்துகளை சைவ, வைணவ கோவில்களில் அனுமதிக்க வேண்டும் என்று அயோத்தி தாசர் பண்டிதர் 1891-ல் சென்னை மகாஜன சபையில் கோரிக்கை வைத்தார். இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. 1924-களில் தந்தை பெரியார் கேரளாவில் உள்ள வைக்கத்தில் கோவிலைச்சுற்றியுள்ள வீதிகளில் நடக்கும் உரிமைக்காகப் போராட்டத்தை நடத்தினார். இரண்டு ஆண்டு நடைபெற்ற இப்போராட்டத்தில் வெற்றியும்



கிடைத்தது. சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் 1928-ல் நாசிக் அருகில் உள்ள காளராம் கோவில் நுழைவு போராட்டத்தை நடத்தினார். இப்படி கோவில் நழைவு போராட்டம் வழிபாட்டுத் தலங்களில் காட்டப்படுகிற பாகுபாடு களுக்கு எதிரான எதிர்ப்பு என்று சுமார் 120 ஆண்டுகளாக இப்போராட்டம் நடந்து வருகிறது.

கடந்த 2008 ம் ஆண்டு தமிழக அரசு வெளியிட்ட 'அனை வரும் அர்ச்சகர் ஆகலாம்' என்கிற ஆணைக்கு உத்தரவுக்கு எவ்வளவு கடும் எதிர்ப்பு? அமைதியும், உண்மைகளும் உள்ள களமாக இருக்கக்கூடிய வழிபாட்டுத் தலங்கள் சில இடங்களில் 'பாகுபாடு களமாகவும்' சாதி மோதல் சம்பவ நிகழ்வுகளாகவும் மாறுவதற்கான காரணங்கள் என்ன? கடவுளின் முன் அனைவரும் சமம்; என்பது ஒருவிதமான 'ஆன்மீக அரசியலமைப்பாக' (Spiritual Constitution ) கருதப்படுகிற நிலையில் இன்னமும் சாதி பார்த்து குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரை கோவில்களுக்குள் அனுமதி மறுக்கிறார்கள் என்கிற செய்தி - ஜனநாயக படுகொலையாக எமது எவிடன்ஸ் அமைப்பு கருதுகிறது. அதே நேரத்தில் இந்து அறநிலையத்துறை மூலமாக அரசே, கோவில்களை நிர்வகிக்கிற நிலை இருந்தும் இத்தகைய பாகுபாடு இருப்பதற்கான காரணம் என்ன? இந்த பாகுபாடுகளை களைவதற்கு அரசு முறையான நீண்ட நிலைத்த செயல் திட்டங் களில் ஈடுபட்டிருக்கிறதா? ஆம் எனில் அவை முறையாக நடை முறைப்படுத்துகிறதா? என்கிற கேள்விகளுக்கு விடை தேடுவது அவசியம். சாதி வகையறாக்களுக்கு என்று கோவில்களை வைத்துக் கொண்டு அவற்றை தனி சொத்தாக பார்க்கப்படுகிற சாதி மனோ பாவ நிலை இங்குள்ளது. இவை சரியில்லை என்று சொல் வதற்கான ஒரு நிலை இங்கு இல்லை என்பதுதான் உண்மை. இந்த உண்மை களை கண்டறிய வேண்டும் என்கிற நோக்கத்தில் எமது எவிடன்ஸ் அமைப்பு வழிபாட்டுத் தலங்களின் பாகுபாடுகள் என்கிற ஆய்வினை நடத்தியுள்ளது.

## ஆய்வின் நோக்கமும் வரையறையும்

வழிபாட்டுத் தலங்களில் பாகுபாடுகள் கடைபிடிக்கப்படு கின்றனவா? ஆம் எனில் என்ன விதமான பாகுபாடுகள் கடை பிடிக்கப்படுகின்றன? அதற்கான காரணங்கள் என்ன? இதனால் சமூகத்தில் ஏற்படுகிற மாற்றங்கள் - சீர்கேடுகள் என்ன? இவற்றை எப்படி சரிசெய்வது? அதற்கான பரிந்துரை என்ன? உள்ளிட்ட நிலைகளை அறிவதையே நோக்கமாகக் கொண்டு 'வழிபாட்டுத் தலங்களில் பாகுபாடுகள்' என்கிற களஆய்வு நடத்தப்பட்டது.

## ஆய்வு எல்லைகளும் முறைகளும்

மதுரை, திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, திண்டுக்கல் ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள 85 பஞ்சாயத்துகளில் இவ்வாய்வு நடத்தப்பட்டுள்ளது. மூன்று பாகங்கள் கொண்ட 38 கேள்விகளை உள்ளடக்கிய படிவம் மூலமாக எமது களஆய்வு குழுவினர் 'ஐந்து குழுக்களை' கொண்டு இவ்வாய்வினை மேற்கொண்டுள்ளனர். 85 பஞ்சாயத்துகளில் 18 பஞ்சாயத்து தலைவர்கள் வழிபாட்டுத் தலங்களின் மீதான பாகு பாடுகள் உள்ளன என்று உறுதி அளித்து கையொப்பம் இட்டு கொடுத்துள்ளனர். அனைத்து படிவங்களிலும் சாட்சிகள் கையொப்பம் இட்டுள்ளனர். பாகுபாடுகள் கடைப்பிடிக்கப்படுகிற சில கோவில்களையும் எமது குழுவினர் படம் பிடித்துள்ளனர்.

## வழிபாட்டுத் தலங்களில் பாகுபாடுகள்

எமது ஆய்வில் 85 பஞ்சாயத்துகளில் 'வழிபாட்டுத் தலங்களில் பாகுபாடுகள்' கடைப்பிடிக்கப்படுகின்றன என்ற கண்டறியப்பட்டுள்ளது. 85 பஞ்சாயத்துகளில் எமது குழுவினர் ஆய்வு செய்ததில் 69 கோவில்களில் தலித்துகள் கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளனர். 72 கோவில்களில் சன்னிதானம் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. 56 கோவில்களில் அர்ச்சனை செய்ய அனுமதி இல்லை. தலித் குடியிருப்பு பகுதிக்குள் தேர் விடாத கோவில்களின் எண்ணிக்கை 54. வழிபாட்டு நேரங்களில் 56 கோவில்களில் பாகுபாடு கடைபிடிக்கப்படுகின்றன. 52 கோவில்களில் தலித்துகளுக்கு பரிவட்டம் கட்டப்படுவதில்லை. 33 கோவில்களில் தலித்துகளுக்கு வடம் பிடிக்க அனுமதி மறுப்பு. பிரசாதம் வழங்குவதில் 59 கோவில்களில் பாகுபாடு, பாதிரியார்கள் மற்றும் பூசாரிகள் காட்டுகிற பாகுபாடுகள் 65 கோவில்களில் உள்ளது. கோவில் கலை நிகழ்ச்சிகளின் போது 64 கோவில்களில் தலித்துகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். பால்குடம், தீச்சட்டி போன்ற சடங்கின்போது 60 கோவில்களில் பாகுபாடுகள் கடைபிடிக்கப்படுகின்றன.

## வன்கொடுமைகளும் சித்திரவதைகளும்

எங்களது ஆய்வில் 49 கோவில்களில் வன்கொடுமை சம்பவங்கள் நடந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. வழிபாட்டுக்கு செல்கிற தலித்துகளை சாதி ரீதியாக இழிவாக பேசுகிற



வழக்கம் 47 கோவில்களில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஆபாசமாகப் பேசுவது, 42 கோவில்களில் கேலி, கிண்டல் செய்வது, 37 கோவில்களில் பாலியல் ரீதியாக பேசுவது 20 கோவில்களிலும் கடைபிடிக்கப்படுகின்றன. தலித் பெண்கள் மீது பாலியல் சீண்டல் 8 கோவில்களில் கடைபிடிக்கப்படுகிறது தெரிய வந்துள்ளது. 30 கோவில்களில் தாக்குதல் சம்பவமும் 43 கோவில்களில் தலித்துகள் மிரட்டப்படுவதும் நடந்துள்ளது.

வழிபாட்டுத் தலங்களில் நடந்த வன்கொடுமைகளில் 7 இடங்களில் குடியிருப்புகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. 6 இடங்களில் பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன. 13 சம்பவங்களில் தலித்துகளுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. உயிர் இழப்பு 9 சம்பவங்களிலும், உடல் உறுப்பு இழப்புகள் 7 சம்பவங்களிலும் பாலியல் வன்புணர்ச்சி 1 சம்பவத்திலும், சமூக புறக்கணிப்பு 8 சம்பவங்களிலும் நடந்துள்ளது.

வழிபாட்டு தலங்களிலும் நடந்த வன்கொடுமையில் 15 சம்பவங்களில் மட்டும்தான் சட்ட தலையீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. காவல்நிலையத்தில் 13 புகார்களும், காவல் துணை கண்காணிப்பாளர் இடத்தில் 10 புகார்களும், மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் 10 புகார்களும், மாநில மனித உரிமை ஆணையத்திடம் 7 புகார்களும், காவல்துறை தலைவரிடம் 4 புகார்களும், தலைமைச் செயலரிடம் 5 புகார்களும், தேசிய மனித உரிமை ஆணையத்திடம் 3 புகார்களும் கொடுக்கப்பட்டுள்ளன. 3 சம்பவங்களில் மட்டும் தீர்வு கிடைத்துள்ளது.

வழிபாடுகளில் தலித்துகள் பங்கு பெற்றால் 'ஆன்மீகத்திற்கான புனிதம்' கெட்டுவிடும் என்கிற சாதிய மனோபாவம் தான் முக்கிய காரணமாக உள்ளது. கோவில் என்பது 'சாதி இந்துக்களின்' மரபு சொத்து என்கிற அடையாளம் வரையறுக்கப்பட்டுள்ளது. தலித்துகள் வழிபாடுகளில், கலந்து கொண்டால் 'சாமி குற்றம்' ஆகிவிடும் என்கிற மூடத்தனமும், முக்கிய பங்கு வகிக்கிறது. சாதி ஆதிக்கம் செய்கிற குற்றத்தை 'கடவுள் குற்றமாக' சொல்கிற - நியாயத்தை ஆதரிப்பதும், இப்பாகுபாடுகளுக்கு ஒரு காரணமாக உள்ளது. சில கோவில்களில் தலித் உள்ளே செல்ல அனுமதி மறுப்பிற்கு சில கதைகளும், இதிகாசங்களும் சொல்லப்படுகின்றன. இப்படி பல காரணங்கள் இருந்தாலும் 'சாதி ரீதியிலான தீண்டாமை பாகுபாடுகள்தான்' முக்கியக் காரணம். இதை

அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு காரணங்கள் இங்கே வகைப் படுத்தப்படுகின்றன என்பதுதான் உண்மை.

தமிழகத்தில் கடந்த மூன்று மாதங்களில் (பிப்ரவரி - மே 2009) பல்வேறு சாதிய மோதல்களும் கலவரங்களும் நடந் துள்ளன. இவற்றில் எமது எவிடன்ஸ் அமைப்பு 12 சம்பவங்களில் நேரடியாக களஆய்வு செய்துள்ளது. சாதிய மோதல்களில் ஐந்து தலித்துகள் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் பார்வை இழந்துள் ளார். ஒருவர் கை எலும்பு முறிக்கப்பட்டு ஊனமாக்கப்பட்டுள்ளார். பனிரெண்டு சம்பவங்களில், 8 சம்பவங்கள் கோவில்களில் தலித்துகள் மீது நடத்தப்படுகிற பாகுபாட்டினை எதிர்த்து கேள்வி கேட்டதினால் நடைபெற்றுள்ளது. இம்மோதல்களில் பெண்கள் பாலியல் ரீதியாக அவமானப்படுத்தப் பட்டுள்ளனர். ஆடைகள் கிழிக்கப்பட்டு அரை நிர்வாணமாக்கப்பட்டுள்ளனர். பலருக்கும் வெட்டுக் காயங்களும், கொடுங் காயங்களும் ஏற்பட்டுள்ளன. அச்சம்பவங்களில் சில இங்கே பதிவு செய்யப்படுகிறது.

**சம்பவம் 1:** தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், செம்பாளூர் கிராமத்தில் கடந்த 17.05.2009 முதல் 27.05.2009 வரை கல்யாண சுந்தரியம்மன் கோவில் திருவிழா நடைபெற்றுள்ளது. திருவிழாவின் இறுதி நாளான 27.05.2009 அன்று தேர் இழுக்கப்படும் போது, தலித்துகள் தேரினை தொட்டுவிட்டார்கள் என்று ஆத்திரமடைந்த 30 பேர் கொண்ட சாதி இந்து வன்கொடுமை கும்பல் சுமார் 10 தலித்துகளை அரிவாள், கத்தி, உருட்டுக்கட்டை உள்ளிட்ட ஆயுதங்களால் கொடூரமாக அடித்து சித்திரவதை செய்துள்ளது. இத்தாக்குதலில் திருமிகு.ஜெயலெட்சுமி (35) க/பெ.முருகேசன் என்கிற தலித் பெண்ணிற்கு பார்வை பறிபோய்விட்டது. கண் பகுதியில் மட்டும் இப்பெண்ணிற்கு சுமார் 10 தையல் போடப்பட்டுள்ளது. கண் அருகில் உள்ள தாடை எலும்பும் முறிந்துள்ளது. இத்தாக்குதலில் மட்டும் திரு.கார்த்திக், திரு.கவாஸ்கர், திரு.சிவாஜி, திரு.ஞான சேகரன், திரு.சுப்பிரமணியன் ஆகிய ஐந்து தலித்துகளுக்கு தலையில் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது. ஐந்து குற்றவாளிகள் மட்டும் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

**சம்பவம் 2:** மதுரை, மேலூர் அருகில் உள்ள கிராமம் கொட்டக்குடி. இக்கிராமத்தில் உள்ள சில தலித்துகள் காளியம்மன் கோவில் அருகில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக் கொடிக்கம்பம் நட்டுள்ளனர். இதனை பொறுத்துக் கொள்ள



முடியாத சாதி இந்துக்கள் கொடிக்கம்பத்தை அப்புறப்படுத்து மாறு மிரட்டியுள்ளனர். (தலித் கட்சிக் கொடியினை கோவிலுக்கு அருகில் நடக்கூடாது. ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் நடுங்கள் என்று சாதி இந்துக்கள் தலித்துகளிடம் கூறியுள்ளனர். மற்ற கட்சிக் கொடிகள் கோவிலுக்கு அருகில் நடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது) இதற்கு தலித்துகள் மறுப்பு தெரிவிக்கவே கடந்த 25.05.2009 அன்று 25 பேர் கொண்ட சாதி இந்து வன் கொடுமை கும்பல் கத்தி, அரிவாள், உருட்டுக்கட்டை உள்ளிட்ட பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு தலித்துகளை கொடூரமாக அடித்து சித்திரவதை செய்துள்ளனர். இத்தாக்குதலில் 9 தலித்து கள் காயமடைந்துள்ளனர். திருமிகு.பாண்டிமீனா (27) க/பெ. திருப்பதி என்கிற தலித் பெண்ணின் சேலையை உருவி மான பங்கப்படுத்தியுள்ளனர். மலர் என்கிற 17 வயது தலித் சிறுமியின் ஆடைகளை கிழித்து அவமானப்படுத்தியுள்ளனர். அபிமன்யு என்கிற 7 வயது சிறுவன் இம்மோதலில் கடுமையாக தாக்கப் பட்டுள்ளான். இதனால் இச்சிறுவனின் இடது காது கடுமையாக பாதிக்கப்பட்டு நீர் கசிந்து வருகிறது. இச்சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளில் 10 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

**சம்பவம் 3:** திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அருகில் உள்ள கிராமம் விளாம்பட்டி. இக்கிராமத்தில் கடந்த 09.04.2009 அன்று நடைபெற்ற முத்தாலம்மன் கோவில் திருவிழாவில் தலித்துகள் தீச்சட்டி எடுக்க அனுமதி மறுத்ததனால் மோதல் ஏற்பட்டது. இம்மோதலில் 10 தலித்துகள் கடுமையான முறையில் காயமடைந்துள்ளனர். இக்கிராமத்தில் உள்ள முத்தாலம்மன் கோவில் பணியினை நான்கு சமூகத்தினர் செய்து வந்தனர். கோவில் கணக்குகளை நிர்வகிப்பது பிள்ளைமார்கள் என்றும், காவல் காப்பது தேவர் சமூகத்தினர் என்றும், தேர் இழுப்பது முத்திரையர் என்றும், கோவிலை கழுவி சுத்தம் செய்வது தலித்துகள் என்றும் பணிகள் பிரிக்கப்பட்டுள்ளது. கோவில் திருவிழாவின்போதும், தேர் பவனியின் போதும் தலித்து களுக்கு கோவிலுக்குள் வர அனுமதியில்லை. இந்நிலையில் முதன் முறையாக சில தலித்துகள் தீச்சட்டி எடுத்து வந்தனர் என்று ஆத்திரமடைந்த சுமார் 20 பேர் கொண்ட சாதி இந்து கும்பல் கத்தி, அரிவாள், உருட்டுக்கட்டை உள்ளிட்ட பயங்கர ஆயுதங் களைக் கொண்டு, எப்படி நீங்கள் தீச்சட்டி எடுத்து வரலாம் என்று கூறிக்கொண்டே கொடூரமான தாக்குதலை நடத்தியுள்ளனர். தலித்துகளும் பதிலுக்கு எதிர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்

தாக்குதலில் இரண்டு தரப்பினருக்குமே காயம் ஏற்பட்டது. ஆனாலும் அதிகளவில் 10க்கும் மேற்பட்ட தலித்துகளுக்கு இரத்த காயங்களும், தலையில் பலத்த காயங்களும் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**சம்பவம் 4:** மதுரை, உசிலம்பட்டி அருகில் உள்ள கிராமம் பூதிபுரம். இக்கிராமத்தில் கடந்த 10.04.2009 அன்று நடைபெற்ற சந்தனமாரியம்மன் கோவில் திருவிழா கலை நிகழ்ச்சியில் தலித் விரோத பாட்டினை போட்டுள்ளனர். இதனை எதிர்த்து கேள்வி கேட்டதற்காக 19 வயது வாய்க்கால்துரை என்கிற தலித் இளைஞரை 7 பேர் கொண்ட சாதி இந்து கும்பல் ஆடைகளை கழட்டி வெறும் ஜட்டியுடன் நிற்க வைத்து செருப்புக் காலால் எட்டி உதைத்தும், கற்களால் தாக்கியும் கொடூரமான முறையில் சித்திரவதை செய்துள்ளனர். இதனால் திரு.வாய்க்கால்துரை கடுமையாக பாதிக்கப்பட்டு மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 13 நாட்கள் சிகிச்சைப் பெற்று வந்தார்.

**சம்பவம் 5:** மதுரை, திருமங்கலம் அருகில் உள்ள கிராமம் சொக்கநாதன்பட்டி. இக்கிராமத்தில் உள்ள முத்தாலம்மன் கோவில் திருவிழாவின் போது, முத்தாலம்மன் சிலையின் மீது பக்தர்கள் கல்லெறிகிற நிகழ்வும் நடைபெறும். இவ்வருடமும் கடந்த 09.04.2009 அன்று கல்லெறி நிகழ்வு சம்பவம் நடந்தது. அப்போது அங்கிருந்த சில சாதி இந்துக்கள் வேண்டுமென்றே திரு.மாயாவுதரன் (40) த/பெ.சுந்தர்ராஜன் என்பவர் மீது கல்லெறிந்துள்ளனர். இக்கல்லெறி சம்பவம் உள்நோக்கத்தோடு நடந்துள்ளது. அதாவது கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற மாட்டுப் பொங்கல் கலைநிகழ்ச்சியின் போது, தலித் இளைஞர் களை, சாதி இந்து இளைஞர்கள் மிரட்டியுள்ளனர். அதற்கு தலித் இளைஞர்களும் பதிலுக்கு சாதி இந்து இளைஞர்களிடம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இப்பிரச்சனையை அடிப்படையாக வைத்துதான் திரு.மாயாவுதரன் மீது கல்லெறியப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து கேள்வி கேட்டதினால் மாயாவுதரன் தாக்கப் பட்டார். சில தலித் பெண்களும் தாக்கப்பட்டனர். இச்சம்பவம் குறித்து அன்றைய தினமே மாயாவுதரன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். தலித்துகள் புகார் கொடுத்ததனால் ஆத்திர மடைந்த சுமார் 50 பேர் கொண்ட சாதி இந்து வன்கொடுமை கும்பல் கத்தி, அரிவாள், உருட்டுக்கட்டை, கோடாளி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களைக் கொண்டு தலித் குடியிருப்பிற்குள்



அத்துமீறி உள்ளே நுழைந்து கொடூர தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதலில் 4 தலித்துகள் தலையில் கடுமையான வெட்டுக் காயங்கள் ஏற்பட்டன. இச்சம்பவத்தில் இதுவரை குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

**சம்பவம் 6:** திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், சின்னகோவிலான்குளம் காவல்நிலைய எல்லைக்குட் பட்டது செந்தட்டி கிராமம். இக்கிராமத்தில் உள்ள முப்பிடாதி அம்மன் கோவிலுக்குள் செல்ல தலித்துகள் அனுமதி மறுக்கப் பட்டு வந்தனர். இதனால் தலித்துகளுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையே மனஸ்தாபம் இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 06.03.2009 அன்று திரு. பெரிய மாடசாமி (38) த/பெ.ஈஸ்வரன் என்கிற தலித் தம்முடைய வயலுக்குச் சென்றுவிட்டு வீட்டிற்கு வருகிற போது, அங்கிருந்த சாதி இந்து பெண்மணி ஒருவர் கோவிலில் சமஉரிமை கேட்கிற நாய்கள் எப்படி எங்கள் பகுதிக் குள் நடக்கலாம் என்று இழிவாக பேசியுள்ளார். இதனால் பெரிய சாமி குடும்பத்தினருக்கும், சாதி இந்துக்களுக்குமிடையே வாக்கு வாதமும் மோதலும் ஏற்பட்டுள்ளது.

இம்மோதலை மனதில் வைத்துக் கொண்டு சுமார் 20 பேர் கொண்ட சாதி இந்து கும்பல் 06.03.2009 அன்று இரவு பெரிய மாடசாமியின் தந்தை திரு.ஈஸ்வரன் (53) மற்றும் திரு.பரமசிவம் (25) த/பெ.பெரியசாமி ஆகிய இரண்டு தலித்துகளை கொடூரமான முறையில் வெட்டி படுகொலை செய்துள்ளனர். இச்சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

சில சம்பவங்கள் மட்டும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. எமது எவிடன்ஸ் அமைப்பு களஆய்வு செய்யாத பத்திரிக்கையில் பதிவு செய்யப்படாத பல சம்பவங்கள் நடந்துள்ளன என்பதுதான் உண்மை. சாதிய மோதல் மற்றும் கலவர சம்பவங்களில் பெரும் பாலும் போலீசார் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் இரண்டு தரப்பினரையும் அழைத்து அமைதிக் கூட்டம் நடத்துகிற "சடங்கு நிர்வாக" நடவடிக்கையில் மட்டுமே ஈடுபட்டு வருகின் றனர் என்பது எமது ஆய்வில் தெரிய வருகிறது. பெரும்பாலான சம்பவங்களில் தலித்துகள் மீது தாக்குதல் நடந்தாலும், வேண்டு மென்றே சாதி இந்துக்களுக்கு ஆதரவாக தலித்துகள் மீது "Counter FIR" பதிவு செய்யப்படுகிற பணியில் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர். அதுமட்டுமல்லாமல் இச்சம்பவங்களில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளில் பாதிக்கப்பட்ட

தலித்துகள் மீதே வேண்டுமென்றே பிணையில் வரமுடியாத பிரிவுகளின் கீழ் பதிவு செய்வதும், பாதிப்பை ஏற்படுத்திய சாதி இந்துக்கள் மீது சாதாரண வழக்கின் கீழ் பதிவு செய்வதும் எழுதப்படாத சட்டமாக இருந்து வருகிறது. இம்மோதலில் 90-95 விழுக்காட்டினர் தலித்துகள் தான் காயமடைந்துள்ளனர். உண்மை தெரிந்தும் காயங்களின் நிலை அறிந்தும் காவல்துறையினர் மேம்போக்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது கண்டிக்கத்தக்கது. அது மட்டுமல்லாமல் தலித்துகள் மீது நடைபெறக்கூடிய தாக்குதல்கள் குறித்து தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989ன் கீழ் வழக்கு பதிவு செய்வதினால் இதற்கு மாற்றாக தான், எதிராக தான் போலீசார் தலித்துகள் மீது பிணையில் வரமுடியாத அளவிற்கு இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்கினை பதிவு செய்கின்றனர்.

சாதிய மோதல்களாலும் கலவரங்களாலும் பாதிக்கப் பட்ட தலித் மக்களினுடைய நிலைகள் குறித்தோ உயிர்ச்சேதம் குறித்தோ, உடல் உறுப்புச் சேதம் குறித்தோ பத்திரிக்கைகளில் வெளிவராமல் இருப்பதும் கவலையளிக்கிறது என்பதை சிவில் சமூகம் சார்பாக மக்களுக்கு நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## பரிந்துரைகள்

✦ வழிபாட்டுத் தலங்களில் கடைபிடிக்கப்படுகிற பாகுபாடுகளின் வடிவங்கள் குறித்தும், அதற்கான காரணங்கள் குறித்தும், தமிழகம் முழுவதும் விரிவான ஆய்வு நடத்தப்பட வேண்டும். இந்த ஆய்வில் மனித உரிமை ஆர்வலர்கள், பத்திரிக்கையாளர்கள், ஓய்வு பெற்ற நீதிபதிகள் உள்ளிட்டோர் இடம் பெற வேண்டும். இவ்வாய்வின் முடிவுகள் வெள்ளை அறிக்கையாக வெளியிடப்பட்டு வழிபாட்டுத் தலங்களில் உள்ள பாகுபாடுகளை களைவதற்கு செயல்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

✦ வழிபாட்டுத் தலங்கள் மீதான பாகுபாடுகள் என்பது பொது நிகழ்வில் பங்கேற்பிற்கான அனுமதி மறுப்பு என்கிற வன்முறையாகத்தான் பார்க்க வேண்டும். இந்திய அரசியல் சாசனம் பிரிவு 15-ல் சாதி, மதம், தொழில், பிறப்பு இவற்றில் பாகுபாடு காட்டக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(14)ல் பொது இடத்தில் தலித்துகள் பங்கு பெறுவதை தடுக்கக் கூடாது என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. இத்தகைய சட்டப் பாதுகாப்புகள் இருந்தும் பாகுபாடுகள் குறைந்தபாடில்லை. ஆகவே பொது இடத்தில் அல்லது பொது நிகழ்வில் பாகுபாடுகளை கடைபிடிப்பவருக்கு எதிராக சிறப்பு சட்டம் தேசிய அளவில் கொண்டு வரப்பட வேண்டும்.



✦ வழிபாட்டுத் தலங்களில் பங்கேற்கும் போது நடைபெறக் கூடிய வன்கொடுமை சம்பவங்களின் குற்றவாளிகளை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிட வேண்டும்.

✦ சாதிய ரீதியான கோவில்கள், பரம்பரை கோவில்கள் உள்ளிட்ட அரசு சாராத கோவில்கள் அனைத்தும் அரசின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும். கோவில்களில் கடைபிடிக்கப்படுகிற சாதி ரீதியான மரியாதை, ஏற்றத்தாழ்வு வழிபாட்டு முறைகள் தடுக்கப்பட வேண்டும். வழிபாட்டு முறைகள், சடங்குகள் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு பொது விதிகளை அரசு உருவாக்க வேண்டும்.

✦ கிறிஸ்துவ தேவாலயங்களில் கடைபிடிக்கப்படுகிற பாகுபாடுகளுக்கு எதிராக சிறுபான்மையினர் ஆணையம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல கிறிஸ்துவ தேவாலயங்களில் கடைபிடிக்கப்படுகிற பாகுபாடுகள் சிறுபான்மை யினர் நிறுவன பிரச்சனையாக பார்க்காமல் சாதிய சமூக பிரச்சனையாக பார்க்கப்படுகிற கண்ணோட்டத்தை அரசு உருவாக்கிக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவ தேவாலயங்களில் பல்வேறு சாதிய வேறுபாடுகள் நிலவி வருவது கண்டறியப்பட்டுள்ளது. கடந்த 2008-ல் எறையூர் கிராமத்தில் நடந்த மோதலில் இருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதற்குக் காரணம் தேவாலயங்களில் கடைபிடிக்கப்பட்ட தீண்டாமைக் கொடுமைகள். ஆகவே தேவாலயங்களில் கடைபிடிக்கப்படுகிற சாதிய பாகுபாடுகள் குறித்தும் அரசு விரிவான ஆய்வினை நடத்த முன்வர வேண்டும்.